லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-7 இதழ்-5 அக்டோபர்-2018 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai

சிறப்புப் பார்வை



# நீதிக்கு வந்த சோதனை?


## உடைபடும் ஜனநாயகம்!







# தலையங்கம்




## பாராட்டுக்குரிய நடவடிக்கை!

தமிழ்நாட்டில் அடுத்த ஆண்டிலிருந்து பிளாஸ்டிக் பொருட்களைத் தயாரிக்கவும் பயன்படுத்தவும் தடை விதிக்கும் தமிழக அரசின் அறிவிப்பு வரவேற்புக்குரியது. இந்த அறிவிப்பு முழுமையாக செயல்பாட்டுக்கு வந்தால், முதல்வர் பழனிசாமியின் பெயரை என்றும் நினைவுகூரத்தக்க வரலாற்று நடவடிக்கையாக இது இருக்கும்.

பிளாஸ்டிக்கின் அடிப்படை பாலியெத்லீன் என்ற ரசாயனக் கலவையாகும். *1898*-ல் வேறொரு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஜெர்மன் வேதியியலாளர் ஹான்ஸ் வேதன் பெச்மனால் தற்செயலாக இது கண்டறியப்பட்டது. பாலியெத்லீன் கண்டுபிடிக்கப்பட்ட *100* ஆண்டுகளுக்குள்ளேயே பிளாஸ்டிக் பொருட்கள் உலகைத் தன்வயப்படுத்திவிட்டன. நாம் வாழும் காலத்தை பிளாஸ்டிக் யுகம் என்று அழைக்கும் அளவுக்கு பிளாஸ்டிக் பொருட்களின் ஆதிக்கம் அதிகரித்துவிட்டது.

விலை குறைவானது, நீண்ட நாள் உழைக்கக்கூடியது, நெகிழ்வுத் தன்மை கொண்டது என்று பாலியெத்லீன் பயன்பாட்டுக்கு ஆதரவாகப் பல காரணங்களைச் சொன்னாலும் ரசாயனப் பாதிப்புகளுக்கு உட்படாத அதன் தன்மை சுற்றுச்சூழலுக்குப் பெரும் கேடு விளைவிக்கக்கூடியதாக இருக்கிறது. வீசியெறியப்படும் பிளாஸ்டிக் பைகள் நீரிலோ நிலத்திலோ ஒருபோதும் மக்காது என்ற நிலையில், அது நிலத்தில் நடந்துகொண்டிருக்கும் உயிரோட்டமுள்ள மறுசுழற்சி இயக்கத்தைத் தடுத்து நிறுத்தி, நிலவளத்தையும் நீர்வளத்தையும் சீர்குலைக்கிறது. இந்நிலையில், 'ஸ்ட்ரா' (உறிஞ் சுகுழல்) உள்ளிட்ட பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டைக் குறைக்கும் நடவடிக்கைகளில் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட *60* நாடுகள் இறங்கியிருக்கின்றன.

இந்தியா வில் டெல்லி உள்ளிட்ட நகரங்களில் பிளாஸ்டிக் பைகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றன என்றாலும், மக்களிடம் சரியான ஆதரவு இல்லாததால் அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை. அதேசமயம், சிக்கிம், இமாசல பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இவ்விஷயத்தில் நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றன என்று ஐநா பாராட்டியிருப்பது கவனிக்கத்தக்கது.

முதற்கட்டமாக பிளாஸ்டிக் கொண்டு தயாரிக்கப்பட்ட பைகள், தட்டுகள், கோப்பைகள், கொடிகள் மற்றும் வாட்டர் பாக்கெட்டுகள் ஆகியவை தடைசெய்யப்படும் எனவும் பால், எண்ணெய் மற்றும் மருந்துப் பொருட்களுக்கான பாக்கெட்டுகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்றும் தமிழக அரசு அறிவித்திருக்கிறது. பிளாஸ்டிக் பைகளுக்கான மாற்றாக முன்வைக்கப்படும் சணல், துணிப்பைகளின் தயாரிப்பை அதிகரித்து, மலிவு விலையில் கிடைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நெகிழிப் பொருட்களின் காலவரையற்ற தீங்கிலிருந்து நாளைய உலகைக் காப்பாற்ற வேண்டிய கடமை ஒவ்வொருவருக்கும் உண்டு. அரசோடு மக்கள் சேர்ந்து நிற்க வேண்டிய தருணமிது!

– ஆசிரியர்

# இந்தியாவை அச்சுறுத்தும் சீனா!



உலக அரங்கில், சீனா தொடர்ந்து எதிர்மறை விளைவுகளைச் சந் தித்து வருகிறது. அதன் தொடர்ச்சி யாக இரண்டு நாடுகள், சீனாவுடன் செய்துகொண்ட பொருளாதார உடன்படிக்கையை மறுபரி சீலனை செய்யப் போவதாக அறி வித்துள்ளன. ஒன்று - மலேசியா; மற்றது - பாகிஸ்தான்.

தனது கனவுத் திட்டமாக சீன அரசு பிரகடனப்படுத்தும் 'ஒரே மண் டலம், ஒரே பாதை' கீழான இரண்டு திட்டங்களை மேற்கொண்டு செயல்படுத்தப் போவதில்லை என்று மலேசிய அரசு அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது. 'கிழக் குக் கடற்கரை ரயில் இணைப்பு' - தென் சீனக் கடலுடன், மலேசியா வின் மேற்குப் பகுதியில் உள்ள மிக முக்கிய துறைமுகங்களை இணைக்கும் திட்டம். மற்றது - போர்னியோ தீவுப் பகுதியில் வரவிருந்த இயற்கை எரிவாயுக் குழாய்த் திட்டம்.

'மிகுந்த செலவு தரும்; தமது பொருளா தாரத்தைத் திவால் ஆக்கி விடும்' என்று, ரத்துக்கான காரணத் தையும் சொல்லி இருக்கிறது மலேசியா. சீனத் திட்டங்கள் அனைத் துமே, தாங்கொணாக் கடன் சுமையைத் திணிக்கக் கூடியன; சமூக, சுற்றுச்சூழலைக் கெடுப்பன; பெருத்த ஊழலுக்கு வழிகோலு வன்' என்று அடுக்கடுக்காய் குற்றச்சாட்டுகள் எழுகின்றன. பாகிஸ்தானிலும் ஏறத்தாழ இதே நிலைமை தான். 'சீன நிறுவனங்கள், நியாயமற்ற வரிச் சலுகைகளைப் பெற்று இருக்கின்றன; முந்தைய அரசாங்கம் சீனாவுடன் மோச மான உடன்படிக்கைகளை மேற் கொண்டுள்ளது' என்று, பிரதமரின் ஆலோசகர் அப்துல் ரசாக் தாவூத், 'டெய்லி பாகிஸ்தான்' உலகப் பதிப்புக்குத் தந்த பேட்டியில் கூறுகிறார்.

ஆனாலும் இரண்டு விஷயங் களில் சீனாவுக்கு சாதகமாக பதில் அளித்துள்ளார். காலனி ஆட்சிக்கு சீனா வழி நடத்துகிறது என்று மலேசியப் பிரதமர் மகாதிர் முகமது கூறியதைக் குறிப்பிட்டு, பாகிஸ்தான் இவ்விஷயத்தை அவ்வாறு அணுகாது என்கிறார். (நன்றாக கவனிக்க - மலேசியப் பிரதமர் கூறியதை எதிர்க்கவோ, மறுக்கவோ இல்லை) மேலும், சீனாவுடன் ஒப்பந்தங்களை ரத்து செய்கிற எண்ணம் இல்லை; ஓராண்டு காலத்துக்கு நிறுத்தி வைக்கலாம் என்று மட்டுமே விவாதிக்கப்படுவதாகக் கூறுகிறார். இதற்கிடையே, சீனா - பாகிஸ் தான் பொருளாதார 'காரிடார்' தொடர்பாக ஆலோசித்து முடி வெடுப்பதற்காக, சிறப்பு அமைச் சரவைக் குழு ஒன்றை, செப்டம்பர் 4 அன்று, பிரதமர் இம்ரான்கான் நியமித்து உள்ளார். அமெரிக்க நிதி உதவிக்கும் உத்தரவாதம் இல்லை; சீன உதவியோ ஏற்றுக் கொள்ளும் வகையில் இல்லை. இரண்டுக்கும் இடையே சிக்கித் தவிக்கிறது - பாகிஸ்தானியப் பொருளாதாரம்.

இதே போன்றுதான் இலங்கை யிலும். அதிகப் போக்குவரத்து இல்லாத நெடுஞ் சாலைகள், வெறிச்சோடிக் கிடக்கிற விமான நிலையங்கள் என்று, பயன்படாத திட்டங்களில் எல்லாம், சமாளிக்க முடியாத சீனக் கடன்கள், கடும் சவால்களாக முன் நிற்கின்றன. அரசு வருவாயில் 80% வரை, 'வரலாறு காணாத' கடன்சுமையே தின்று விடுவதாக, 'வாஷிங்டன் போஸ்ட்' விவரிக்கிறது. ஒரே மண்டலம், ஒரே பாதை திட்டத்தில் இந்தோனேசியாவையும் சீனா வஞ்சித்துள்ளது.

இதன்காரணமாக பல்வேறு நாடுகளும் சீன அரசுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகளை மறு பரிசீலனை செய்கிற எண்ணத்தில் இருப்பதாக 'வாஷிங்டன் போஸ்ட்' செய்திக் கட்டுரை தெரிவிக்கிறது. அதிகரித்து வரும் 'விலகல்கள்', சீனப் பொருளாதாரத்தைப் பாதிக் கவே செய்யும். குறைந்த விலைப் பொருட் களால் அந்நிய சந்தையில் ஆதிக்கம் செலுத்திவரும் சீனா, ஏற்றுமதிச் சரிவால், விரைவில் பொருளாதாரச் சரிவை சந்திக்க நேரிடும் என்றே தோன்றுகிறது.

சீனாவுடன் நமது வர்த்தக உறவு மேலும் வலுப்பட வேண்டும் என்று விரும்புகிறவர்கள், பிற நாடுகளின் அனுபவத்தைப் பார்த்து எதுவும் கற்றுக் கொண்டுள்ளார்களா...? சுரண்டல் பொருளாதாரத்தின் மையமாக சீனா செயல்படுவதை நாம் ஏற்றுக் கொள்கிறோமா...? 'அநியாய வட்டி', 'நம்பகத்தன்மை அற்ற செயல்பாடு', 'இரு பக்க நலனைப் பின்னுக்குத் தள்ளி, தன் நலனை மட்டுமே முன் நிறுத்துகிற 'ஒருபக்க' ஒப்பந்தங்கள்... இந்திய - சீனப் பேச்சுகளில், இது குறித்த அச்சங்கள், அம்சங்கள் இடம் பெறுகின்றனவா.... தெரிய வில்லை.

**- அகிலாண்டேஸ்வரி**


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

MAKKAL VISARANAI

**மக்கள் விசாரணை**

மக்களின் மனக்குமுறல்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-7 அக்டோபர்-2018 இதழ்-5

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ் சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் ஆ.மவுரியன், B.A., M.A., Ph.D.,

**ஆசிரியர் குழு**
V.அருணாச்சலம், A.C. குமார், S. அனந்த கிருஷ்ணன், M.A.,

**நிர்வாக ஆசிரியர்**
வீ.சிவசங்கரன், B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன், P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி, V.சங்கர், அ.மு.ரமணாத்திரி

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ராம்குமார் சேலம், M.சத்தியராஜ் நாமக்கல், A.பாலகிருஷ்ணன், K.செந்தில்குமார் கோவை, R.ஜெயா, K.ஷமீம் ஷகிலா தென்சென்னை, P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, நாகராஜ் மூணாறு, மாரிமுத்து உளுந்தூர்பேட்டை, சுசீ ஈஸ்வர் தென்காசி, ராமசுப்பிரமணியன் ராஜபாளையம், சிலம்பரசன் தர்மபுரி, வெங்கடேசன் தி.மலை, S.ரமேஷ்

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம், K.L.ராஜேந்திரன் P.ஏழுமலை M.நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின், ஆரணி ஏழுமலை, சத்தியநாராயணமூர்த்தி, சதீஷ்குமார், N.குப்புசாமி, நீலகண்டன், N.சீனிவாசன், M.முருகன், G.ஆனந்த்குமார், D.ராஜேஷ், கிஷோர், முரளி

**சட்ட ஆலோசகர்கள்**
M.குணசீலன் B.Com., M.L.,
M.சுதாகர் B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

**புகைப்பட நிருபர் : M.சந்தோஷ்சிவன்**

**இதழ் வடிவமைப்பு: ஆப்பிள் பிரிண்டர்ஸ்**

ஆலுவலகம் :
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600078.
E-mail: writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
Website: www.makkalvisaranai.com
Contact: 93821 33334, 044 - 4861 5321

# சிறுவர், சிறுமிகளைக் காக்கத் தவறுகின்றார்களா?



கிராமப்புறங்களில் பால்யம் கழிந்த நமது அப்பாக்களின், தாத்தாக்களின் தலைமுறையிலோ, அன்றாடம் சர்வசாதாரணமாகப் பல கிலோ மீட்டர் தூரங்களைக் கடந்து சின்னஞ்சிறு சிறுவர்களும், சிறுமிகளும் தனியாகப் பயணித்து வருவார்கள். இப்போதெல்லாம் ஒரு சிறுமியையோ, சிறுவனையோ சாலையில், தெருக்களில் தனித்துக்காண நேர்ந்தால் பதற்றம் தொற்றிக்கொள்கிறது. குழந்தைகள் இன்றைக்கு எத்தனை பெரிய ஆபத்துகளுக்கு மத்தியில் இருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டிய தருணம் இது. 1098 என்பது 'சைல்ட்லைன்' (குழந்தைகள் தொடர்பு) எனும் அரசு சாரா நிறுவனம் ஏற்படுத்தியிருக்கும் 24 மணி நேர தொலைபேசி வசதியாகும். இவ்வசதி மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை மற்றும் தொலைதொடர்புத் துறையின் ஒத்துழைப்போடு உருவாக்கப்பட்டது.

கடந்த ஜூலை மாதம் கடைசி வாரத்தில், 1098 அழைப்பு மையத்துக்கு அழைத்த நபர், பதற்றத்துடன் ஒரு விஷயத்தைச் சொன்னார். பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட, ஐதராபாத்திலிருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ள யாதகிரிகுட்டாவுக்கு அதிகாரிகள் குழு விரைந்தது. யதாத்ரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட யாதகிரிகுட்டாவின் மலைப் பகுதியில், புகழ்பெற்ற லஷ்மி நரசிம்மர் கோயில் அமைந்துள்ளது. அங்குள்ள பிசி காலனிக்கு அதிகாரிகள் குழு சென்றடைந்தது. தொலைபேசி அழைப்பில் குறிப்பிடப்பட்ட வீட்டுக்குச் சென்றபோது, வீட்டு வாசலில் ஒரு ஒன்பது வயதுக் குழந்தை, கைகளில் காயங்களுடன் அழுதுகொண்டிருப்பதைக் கண்டனர். அவர்களது கேள்விகளால் மிரட்சியடைந்த குழந்தை 'சேட்டை செய்ததால் அம்மா அடித்துவிட்டதாக' பதில் கூறினாள். இதனை நம்ப முடியாத அதிகாரிகள், அக்குழந்தையின் அம்மாவைத் துருவித் துருவி விசாரித்தனர். அக்குழந்தையைத் தான் ரூ.1 லட்சத்துக்கு வாங்கிய உண்மையை அவர் ஒப்புக்கொண்டார்.

அதுபோல, அங்கே நிறைய 'அம்மாக்கள்' இருக்கிறார்கள் என்பதும் தெரியவந்தது. அந்தப் பகுதியில் குழந்தைகளை வைத்துப் பாலியல் தொழில் நடந்துவந்த அவலம் வெளியுலகத்துக்கு வந்தது அப்படித்தான். மேலும் பல வீடுகள் சோதனையிடப்பட்டு, 14 பெண் குழந்தைகள் மீட்கப்பட்டனர். 11 பேர் கைதுசெய்யப்பட்டனர்.



சிலர் தகவல் அறிந்து தாங்கள் சிறைப்பிடித்து வைத்திருந்த குழந்தைகளுடன் தப்பிச் சென்றுவிட்டனர். நாம் நினைத்துப்பார்க்க முடியாத கொடுமைகள் அக்குழந்தைகளுக்கு இழைக்கப்பட்டிருப்பதும் தெரியவந்தது. அருகில் இருந்த நர்சிங் ஹோமில் சோதனை நடத்திய காவல் துறையினர், 40 ஹார்மோன் ஊசி மருந்துகளைக் கைப்பற்றினர். மேலும், 11 குழந்தை கடத்தல்காரர்களையும் கைதுசெய்தனர். இவர்கள் குழந்தைகளைக் கடத்திவருவதும், தரகர்களிடம் விற்பதும், அக்குழந்தைகள் நிர்க்கதியற்று பாலியல் தொழிலில் தள்ளப்படுவதும், நீண்டகாலமாக நடை பெற்றுவருகிறதென காவல் துறை தெரிவித்தது.

நீண்ட, சிக்கலான தொடர் பின்னல் வழியாக இந்தக் குழந்தைகள் கைமாற்றப்படுகிறார்கள். இவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதும், மீட்டெடுக்கப்பட்ட குழந்தைகளின் குடும்பங்களைத் தேடிக் கண்டடைவதும் காவல் துறைக்குச் சவாலாக இருக்கிறது. ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், ஒதுக்குப்புறமான பகுதிகள் என்று பல்வேறு இடங்களிலும் செயல்படும் ஒருங்கிணைந்த குற்றக் கும்பல்கள், சாக்லேட்டுகளையும், ஐஸ்க்ரீம்களையும் காட்டிக் குழந்தைகளைக் கடத்திச்செல்வதாகக் கூறுகிறார் நல்கொண்டாவின் மாவட்ட குழந்தைகள் நல்வாழ்வு கமிட்டியின் தலைவர் நிம்மைய்யா. பெற்றோர்களே குழந்தைகளை விற்கும் கொடுமையும் நிகழ்கிறது.

அன்றாடம் 174 குழந்தைகள் காணாமல் போகின்றனர். அவர்களில் 50% குழந்தைகள் திரும்பக் கிடைக்கவேயில்லை. ஒரு குழந்தையைத் தேடுவதில் காவல் துறை எவ்வளவு காலதாமதம் செய்கிறதோ, அந்த அளவுக்கு அக்குழந்தை மீண்டும் கிடைப்பது கடினமானதாகிவிடுகிறது. ஒரு குழந்தை காணாமல் போய்விட்டதாகப் புகார் வந்த மறுகணமே, காவல் துறை, ஆள்கடத்தலுக்கான முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும் என 2013-ல் வெளிவந்த உச்ச நீதிமன்ற உத்தரவு வலியுறுத்துகிறது. "ஆனால், காவல் துறை தரப்பில் இந்த அம்சத்தில் பெரும் தயக்கம் காணப்படுகிறது. குழந்தைகள் காணாமல் போகும் புகார்கள் பெரும்பாலும் நிராகரிக்கப்படுகின்றன. அவர்கள் ஓடிப்போயிருப்பார்கள், திரும்ப வந்துவிடுவார்கள் எனக் குடும்பங்களிடம்




சொல்லப்படுகின்றன. இதன் மூலம், முக்கியமான நேரம் விரயமாக்கப்படுகிறது. விசாரணை தொடங்குவதற்குள், அக்குழந்தை அம்மாநிலத்தை விட்டே காணாமல் போய்விடுகிறது" என்கிறார் நிம்மைய்யா. சற்றே வளர்ந்த சிறார்களைப் பொறுத்தவரை (10-12 வயது), "ஒவ்வொரு ஐந்து நிமிடமும், நாட்டின் ரயில்வே பிளாட்பாரங்களில் ஏதோ ஒரு குழந்தை யார் துணையுமின்றி வந்துசேர்கிறது" என 'ரயில்வே குழந்தைகள்' எனும் வீதியோரச் சிறாருக்காக வேலை செய்யும் சர்வதேச அமைப்பு கூறுகிறது.

'காணாமல் போகும் குழந்தை'களில் நிறையப் பேர், பெற்றோரின் அடி, உதைக்குப் பயந்தோ, பள்ளிகளில் தண்டனைக்குப் பயந்தோ, சினிமா நடிகராகும் கனவுடனோ இவ்வாறு வந்திறங்குகிறார்கள் என அவ்வமைப்பின் ஜூலை மாத அறிக்கை குறிப்பிடுகிறது.

சமீபத்தில், சைல்ட்லைன் ஃபவுண்டேஷன் நடத்திய கணக்கெடுப்பின் அடிப்படையில், இந்தியாவில் மொத்தம் 9,589 குழந்தை காப்பக நிறுவனங்கள் உள்ளன என்றும், அவற்றில் உள்ள குழந்தைகளில் 1,575 குழந்தைகள் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகின்றனர் என்றும் தெரியவருகிறது. உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தான் அளித்த பிரமாணப் பத்திரத்தில் இதைத் தெரிவித்திருக்கிறது. அவ்வழக்கின் நீதிபதி மதன் பி.லோகுர், "அந்தக் குழந்தைகளுக்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? 1,575 குழந்தைகள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டதற்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்?" என மத்திய அரசை நோக்கி கேள்விகளை எழுப்பியிருக்கிறார்.

**- இர்வின்**

# ரூபாயின் வீழ்ச்சியை தடுக்க என்ன வழி?

அமெரிக்க டாலருக்கு நிகராக ரூபாயின் மதிப்பு சரிந்து வருவதைக் கடந்த 15 நாட்களாகப் பார்க்கிறோம். ஆண்டின் தொடக்கத்தில் 64 ரூபாயாக இருந்தது, தற்போது 72 ரூபாயாகியிருக்கிறது. ரூபாயின் மதிப்புச் சரிவுக்குப் புறக் காரணங்கள்தான் மூலம் என்று நிதியமைச்சர் அருண் ஜேட்லி சரியாகவே கூறியிருக்கிறார். அதிலும் குறிப்பாக, செலாவணியில் ஊக வியாபாரம் செய்பவர்கள் அமெரிக்கப் பொருளாதாரத்தை மையமாக வைத்துச் செயல்படுகின்றனர்.

டிரம்ப் நிர்வாகம் எடுத்த சில நடவடிக்கைகளால் அமெரிக்கப் பொருளாதாரம் நிமிரத் தொடங்கியிருக்கிறது. 1. கம்பெனிகள் மீதான வரிவிதிதங்களைக் கணிசமாகக் குறைத்தார் டிரம்ப். இது முதலாளிகளுக்கு ஊக்குவிப்பைத் தந்தது. 2. அமெரிக்க மத்திய வங்கிகளில் போடப்படும் டெபாசிட்டுகள் மீதான வட்டி வீதத்தை உயர்த்தியது. இது முதலீட்டாளர்களை ஈர்த்தது. 3. வேலைவாய்ப்பும் உற்பத்தியும் அதிகரித்து, அமெரிக்கப் பொருளாதாரம் எழுச்சியடையத் தொடங்கியுள்ளது. இதனால், மேற்கு நாடுகளின் முதலீடுகள் அமெரிக்காவை நோக்கிப் படையெடுக்கின்றன. இதற்கு டாலர் மிகவும் தேவைப்படுவதால் எல்லா நாட்டு கரன்சிகளுக்கு நிகராகவும் டாலரின் மதிப்பு உயர்கிறது. ரூபாய் மட்டுமல்ல பவுண்ட், ஐரோப்பிய ஒன்றியத்தின் யூரோவும்கூட சரிந்துவருகின்றன.

வெளிவர்த்தகப் பற்றுவரவில் துண்டுவிழுவது குறையும். ஆனால், சமீபத்திய ஆண்டுகளில் இந்த உத்தி பலனளிக்கவில்லை. காரணம், ஒரே சமயத்தில் பல நாடுகள் தங்களுடைய நாட்டுச் செலாவணியின் மதிப்பைக் குறைத்துக்கொண்டால் சர்வதேசச் சந்தையில் பல நாடுகளின் பொருட்கள் விலை மலிந்துவிடும். எனவே, எந்த ஒரு நாட்டுக்கும் அதிக பலன் கிடைத்துவிடாது. ரூபாயின் மதிப்பு சரிந்தாலும்கூட இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்துவிடாது. இறக்குமதியும் சரிந்துவிடாது. சிலவகைப் பொருட்களின் இறக்குமதி அத்தியாவசியமாக இருப்பதால், அதிக விலை கொடுத்தாவது இறக்குமதி செய்தாக வேண்டும். கச்சா பெட்ரோலியம் இதற்கு நல்ல உதாரணம்.

இந்திய ரிசர்வ் வங்கியிடம் கணிசமான அளவு வெளிநாடுகளின் செலாவணிகள் கையிருப்பில் உள்ளன. உடனடியாக நமக்குப் பெருத்த தட்டுப்பாடு அல்லது நெருக்கடி வராது. நம்முடைய கவலையெல்லாம் இப்படி ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிகிறதே என்பதைப் பற்றித்தான். இப்படியே தொடர்ந்தால், உள்நாட்டுப் பொருளாதாரத்தை இது பாதிக்கத் தொடங்கலாம். கச்சா பெட்ரோலிய எண்ணெய் விலை உயர்வால் உள்நாட்டில் டீசல்-பெட்ரோல் விலை உயர்த்தப்படுகிறது. இது நாளடைவில் போக்குவரத்துச் செலவிலும், போக்குவரத்து மூலம் கொண்டுசெல்லப்படும் சரக்குகளின் விலையிலும் நீர்வட்ட விளைவை ஏற்படுத்தும். காய்கறிகள், பழங்கள், உணவு தானியங்கள், பால் என்று ஏராளமான உணவுப் பொருட்கள் அன்றாடம் வாகனங்களில்தான் ஏற்றி அனுப்பப்படுகின்றன என்பதால் அவற்றின் விலையும் உயரும். அத்துடன் இறக்குமதியாகும் அவசியப் பொருட்களின் விலையும் அதிகரிக்கும். டாலர் கணக்கில் கடன் வாங்கிய இந்திய நிறுவனங்கள் அதிக வட்டி செலுத்த நேரும். இதனால் அவற்றின் லாபம் குறையும், செலவு அதிகமாகும்.

மத்திய அரசும் ரிசர்வ் வங்கியும் இணைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஏற்கெனவே, அவசியமில்லாத இறக்குமதிகளைத் தவிர்க்கவும் அவசியமானவற்றின் அளவைக் கட்டுப்படுத்தவும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பெட்ரோல்-டீசல் மீதான உற்பத்தி வரியை மத்திய அரசும் மதிப்புக்கூட்டு வரியை (வாட்)






மாநில அரசுகளும் குறைக்க வேண்டும். சர்வதேசச் சந்தையில் கச்சா பெட்ரோலியத்தின் விலை குறைவாக இருந்தபோது, அரசுக்கு வருவாய் தேவை என்பதற்காகத்தான் மத்திய அரசு அதன் மீது உற்பத்தி வரியை அதிகமாக விதித்தது. எனவே, உற்பத்தி வரியைக் குறைத்தாக வேண்டிய தார்மிகக் கடமை மத்திய அரசுக்கு இருக்கிறது. அடுத்ததாக, ரிசர்வ் வங்கி தன் கைவசம் வைத்திருக்கும் டாலர்களைச் சந்தையில் விடுவிக்கலாம். இதனால் சந்தையில் டாலர் கிடைப்பது அதிகமாகி ரூபாயின் மதிப்பு சரிவது கட்டுப்படலாம். ஆனால், கையிருப்பில் உள்ள டாலர்களை அதிகம் செலவிட்டால் பிறகு நிலைமை சிக்கலாகும்போது நெருக்கடி அதிகமாகிவிடும். எனவே, எச்சரிக்கையுடன்தான் இதைச் செயல்படுத்த வேண்டும்.

இப்போது பணவீக்க விகிதம் 4%. ரூபாயின் மதிப்பு இப்படியே இருந்தால் இது மேலும் அதிகரிக்கும். இதனால் ரிசர்வ் வங்கியின் பணக்கொள்கை குழு (எம்பிசி) கூடி வங்கிகளில் டெபாசிட்டுகளுக்கான வட்டியை மேலும் உயர்த்த நேரிடலாம். இது பணவீக்க விகிதத்தையும் கட்டுக்குள் கொண்டுவரலாம். இதனால், பொருளாதார வளர்ச்சி வேகம் குறையும். காரணம், நிறுவனங்களின் லாபம் குறையும். நிறுவனங்களின் லாபம் குறையும் என்றால், அந்நிய முதலீட்டாளர்கள் இந்தியச் சந்தையிலிருந்து பெரும் எண்ணிக்கையில் விலகுவார்கள். அது ரூபாயின் மதிப்பை மேலும் சரித்துவிடும்.

இச்சூழலில் மிகச் சிறந்த வழி, வெளிநாடுவாழ் இந்தியர்களிடம் கடன் பத்திரங்களை விற்று டாலர்களை நேரடியாகத் திரட்டுவதுதான். மூன்று ஆண்டுகள் முதிர்வுக் காலம் என்று குறிப்பிட்டு, வட்டியையும் உள்நாட்டு இந்தியர்களுக்குள்ள அளவே அறிவித்தாலும் வெளிநாடுகளில் உள்ள இந்தியர்கள் கடன் பத்திரங்களை வாங்குவார்கள். அதனால் டாலர் கையிருப்பு கணிசமாக உயரும்.

ரூபாயின் செலாவணி மதிப்பில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சி தற்காலிகமானது. ஆனால், ஒரு டாலருக்கு 70 ரூபாய் என்ற அளவுக்கு மட்டுமே இது ஸ்திரமாகக்கூடும். இந்தியப் பொருளாதாரம் இதற்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும். டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு வெகுவாகக் குறையாமலும் உயராமலும் இருப்பது அவசியம். இல்லையென்றால், இந்தியாவில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்களும் தனிநபர் முதலீட்டாளர்களும் தங்களுடைய முடிவை வேகமாக மாற்றிக்கொள்வார்கள். அது விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்திவிடும்!

- குருதேவ்




# சுற்றுச்சூழல் மட்டும் மாசுபடவில்லை, நம்முடைய சமூகமும்தான்

முன்பெல்லாம் பெங்களூரு மாநகரில் எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று மரங்களும் புல்வெளிகளும் தோட்டங்களுமாகக் காட்சி தரும். நகரில் பேசும் கன்னட மொழிகூட, ஒரு பதம் இன்னொரு பதத்தோடு போய் மோதாமல் இனிமையாகவும் சாவகாசமாகவும் இழையும். வீதிகளில் உள்ள குழாய்களிலிருந்து நேரடியாகத் தண்ணீர் குடிப்போம், வீடுகளில் மின் விசிறிகளுக்கே தேவை இருக்காது. இப்போது பெங்களூரு மாநகரம் வளர்ச்சியடைந்துவிட்டது. உலகிலேயே பற்றி எரியும் முதல் ஏரி பெங்களூருவில்தான் இருக்கிறது என்று பெருமைப்படுகிறோம்!

காற்றில் மாசு அதிகரித்துவிட்டதால் ஏராளமான பேர் நோயாளிகளாகிவருகின்றனர். பொது சுகாதாரம் வீழ்ச்சியடைந்து கொண்டே வருகிறது. இந்தப் பட்டியலுக்கு முடிவே இல்லை. இந்தப் பிரச்சினைகள் இந்தியாவின் எல்லா நகரங்களுக்கும் மாநகரங்களுக்கும் பொதுவானவை. ஒரு குறுகிய காலகட்டத்துக்குள் ஆரோக்கியமான பெங்களூருவிலிருந்து அசுத்தமானபெங்களூருவுக்கு எப்படி வந்தோம் என்பது தெரியவில்லை. பெரும்பாலான வளர்ச்சிகளைப் போலவே நகரின் மாற்றங்களும் ஓசையில்லாமலும், நம்முடைய கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டும் நிகழ்கின்றன. சுற்றுச்சூழல் பராமரிப்பு தொடர்பான 180 நாடுகளின் பட்டியலில், இந்தியாவுக்கு 177-வது இடம். நிலம், நீர், காற்று ஆகிய மூன்றிலும் எவ்வளவு மாசும் நஞ்சும் கலந்திருக்கிறது என்பதை மட்டும் இது காட்டவில்லை, நாம் எப்படி இதில் அலட்சியம் காட்டி வருகிறோம் என்பதையும் காட்டுகிறது.

உயிரித் தொழில்நுட்பங்களால் புதிதாக உருவாகும் அசுரன்களை ஹாலிவுட் திரைப்படங்கள் மூலம் காட்டி பயமுறுத்த வேண்டிய அவசியமே இல்லை, நேரிலேயே வந்துவிட்டார்கள். ரசாயனக் கூடங்களில் தயாரிக்கப்பட்டதைப்போன்று வினோதச் சுவையோடு இருக்கிறது நகரின் குடிநீர். எப்படி இப்படி மாறினோம்? சுற்றுச்சூழல் மட்டும் மாசுபடவில்லை, நம்முடைய சமூகமும்தான். தினந்தோறும் போக்குவரத்து சிக்னல்கள் எதிரில் மைல் கணக்கில் ஒன்றன்பின் ஒன்றாகக் கார்கள் புகையைக் கக்கிக்கொண்டு நிற்கின்றன. வளர்ச்சி என்றாலே ஒவ்வொரு தனிமனிதனுக்கும் எது ஆசையோ அதை நிறைவேற்றிக்கொள்வதுதான் என்று எப்படி தீர்மானித்தோம்?

ஆதிக்கசக்திகளின் அதிகாரம் இயற்கைச் சூழலையும் சமுதாயச் சூழலையும் நம்முடைய ஒப்புதல் இல்லாமலேயே மாற்றுகிறது. இதையும் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்டுவிடுகிறோம். இந்த மாற்றம், இயல்புபோல திணிக்கப்பட்டுவிட்டது. இது ஏன் என்று கேட்டால் 'தேச விரோதி' என்றோ 'தொழில்நுட்ப விரோதி' என்றோ முத்திரை குத்திவிடுகிறார்கள். இப்போது தேசமே ஒரு இயந்திரமாகத்தான் உருவகிக்கப்படுகிறது. சில பழக்கவழக்கங்களை மாற்றவே முடியாத இந்தச் சமூகத்தில், வளர்ச்சி என்றால் இதுதான் என்ற கொள்கை, எல்லா நகரங்களிலும் மாநகரங்களிலும் அங்கு வாழும் மக்களை நேரடியாகவே பாதித்தாலும், பரவிவிட்டது.

இதில் வியப்படைய ஏதுமில்லை. இயற்கையே சமூகம்தான் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். தூய்மையான இயற்கை இன்று நமக்குக் கிடைக்கவில்லை, இயற்கை தொடர்பான நம்முடைய எண்ணங்கள் அனைத்தும் சமூகத்தால் கட்டமைக்கப்பட்டவை. நாற்றமடிக்கும் குப்பைகள் வீதியில் இருப்பதைப் போல - செத்து அழுகிய பிராணிகளின் துர்நாற்றம் காற்றில் கலந்திருப்பதைப் போல, நம்முடைய சமூகத்தின் சிந்தனைகளிலும் செயல்களிலும்கூட அசுத்தங்கள் நிரம்பி வழிகின்றன. இவை எப்படி தொடங்கின, எப்படி பரவின என்றெல்லாம் நமக்குத் தெரியாது. சமூகத்தின் கண்ணியம் தகர்ந்துபோயிருப்பதும், வெறுப்பு விசிறிவிடப்படுவதும் சமூகப் பிறழ்வுகள் அல்ல, நம்மால் உணரப்படாமல் சுற்றுச்சூழலில் மாசு சேர்ந்ததைப் போலத்தான் இதுவும். துர்நாற்றம் காற்றில் எளிதாக, விரைவாக எல்லா இடங்களுக்கும் பரவுவதைப் போல சிறு அளவிலான வெறுப்புணர்வுகூட வேகமாக எல்லா இடங்களுக்கும் பரவிவிடுகிறது.

காற்று மாசு, தண்ணீர் மாசு ஆகியவற்றை அளப்பதைப் போல கண்ணியமான சமூகத்தை அளப்பதற்கும் குறியீடுகள் அவசியம். சமூக மாசை அளக்கும் வழக்கத்தை ஏற்படுத்தி, 'சமூக அலட்சியக் குறியீடு' என்பதை உருவாக்கினால் நாம் உலக அளவில் அதிலும் கடைசி இடத்தில்தான் இருப்போம். நம் நாட்டில் இருக்கும் நிலைமைக்கு 'வெறுப்புக் குறியீடு', 'ஏற்றத்தாழ்வு குறியீடு' போன்றவைகள்கூட அவசியப்படுகின்றன. இயற்கை உலகின் மாசை வெற்றிகரமாக நீக்க வேண்டும் என்றால், இது சமூகத்தில் உள்ள பிரச்சினைகளுக்கு இணையானது என்பதை அங்கீகரிக்க வேண்டும். குப்பை மலைகள் நமக்குக் கவலையை அளிக்கிறது என்றால் அதற்குக் காரணம் அதைப்பற்றிய அக்கறை இல்லாத நம்முடைய சமூகப் பழக்கங்கள்தான்.

நம்முடைய சுற்றுச்சூழல் இந்த அளவுக்கு மாசு அடைந்ததற்குக் காரணம் முறையான சிந்தனை இல்லாமல் நாம் மேற்கொண்ட வளர்ச்சித்



திட்டங்கள்தான். ஒவ்வொருவரும் சொந்தமாக கார் அல்லது பைக் வைத்திருப்பதுதான் முன்னேற்றம் என்று ஏன் நினைக்கிறோம்? நம்முடைய அன்றாட வாழ்வில் தேவையற்ற விளைவுகளை ஏற்படுத்தும் செயல்களை ஏன் 'முன்னேற்றத்துக்குத் தரும் விலை' என்று ஏற்றுக்கொள்கிறோம்? சிந்தனையற்ற வளர்ச்சியும் சமூகச் சூழல் கேட்டுக்கு முக்கிய காரணம். விஷத்தைப் பரப்பும் செயல்களை - பேச்சுகளை எதிர்க்காமல் மவுனமாக ஏற்பதும், நமக்குத் தீங்கு செய்யும் தொழில்நுட்பத்தையும் உற்பத்தி முறைகளையும் ஏற்றுக்கொள்வதைப் போலத்தான்.

இயற்கைக்கும் சமூகத்துக்கும் இடையில் நாம் ஏற்படுத்தும் பெரிய இடைவெளிதான், இரண்டிலும் மாசு அதிகமாவதற்குக் காரணம் என்பதை மறந்துவிடுகிறோம். காற்றிலும் தண்ணீரிலும் கலந்த அழுக்குகளை, நச்சுகளை இயற்கையுடன் சேர்ந்து ஒரு சமூகமாகச் செயல்பட்டால் தூய்மைப்படுத்திவிட முடியும். சுற்றுச்சூழலில் ஏற்படும் தூய்மையும் தேசத்தின் சமூகத்தில் ஏற்படும் தூய்மையும் வேறல்ல!

நமக்கு 'தூய்மை இந்தியா' வேண்டும் என்றால், நதிகளையும் பொது இடங்களையும் தூய்மையாக்க வேண்டும் என்பதாக நம் எண்ணம் முடிந்துவிடக் கூடாது. அழுக்கான எண்ணங்களையும் நடவடிக்கைகளையும் கைவிட்டு நம்முடைய தெருக்களையும் கழிப்பறைகளையும் தூய்மைப்படுத்த நினைப்பதைப் போல, மனங்களையும் தூய்மைப்படுத்திக்கொண்டால்தான் அது சாத்தியம்!

- V.அருணாசலம்

முனைவர் ஆ.மவுரியன்





வீர தமிழச்சிகளின் வரலாறு..!

(12)

# மணலூர் மணியம்மாள்

## எண்ணிலடங்கா விவசாயப் போராட்டங்களில் பங்கெடுத்த இரும்புப் பெண்மணி

ஏந்தவொரு சமுதாயப் போராட்டத்திலும் சரிபாதியானப் பெண்கள் பங்கு பெறாவிடில், அப்போராட்டம் வெற்றியடையாது என்ற கூற்று. தேசியவிடுதலைப் போராட்டத்திற்கும் உகந்ததே. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வெற்றிக்குப் பின்புலமாக இருந்தது பல வீரப் பெண்மணிகளின் தியாகங்களும் போராட்டங்களுமே. அந்த வொரு வரிசையில் சரித்திரத்தில் ஆழமாகப் பதியப்படாத மணலூர் மணியம்மை என்ற வீராங்கனையின் சுதந்திரப் பேராட்ட வரலாறு.

அழகிய தஞ்சையிலே
அவதரித்த அன்னையவர்
மணிமணியாய் மக்கள்நெஞ்சில்
மாலையான மங்கையர்குலமகள்
மணலூர் மணியம்மை கதை யிதுவே...

விவரமறியா விரிய லவரின்
விதியொன்றும் அத்தனை அழகில்லை
பணம்படைத்தவன் பார்வைப்பட - அழகு
பதுமையாகிறார் இரண்டாம்தாரம்...

ஏச்சும் பேச்சும்
மூத்தவளின் முதலாளித்தனமும்
எழிலரசி வாழ்வினை சீர்குலைக்க
ஏற்றவனும் ஓர்நாள் இறந்திடவே
விதவையென் ராகிறார்
வெகுளிப்பெண்ணும்...

ரவிக்கையும், செருப்பும், தலைமயிரும்
சூறையாடப்பட்டன சடங்குகளால்....

ஆங்கிலமும் சட்டமும் கணவன் வீட்டின்
அடுக்களையில் இருந்தபடி படித்தறிந்தவர்
அடக்குமுறை யென்ற அவலம்தனை
அறவே ஒழித்திட தீர்மானித்தார்...

அலங்கார சிலையாக ஒப்பனை செய்து -
முதல்
புரட்சியினை வீட்டிலே
தொடங்கிவைத்தார்...

அண்ணல் காந்தியிடம் ஆசிப்பெற்று
மதுவிலக்கு, தீண்டாமை மட்டுமின்று
கதர் பிரச்சாரத்திலும்
தன்னை ஈடுபடுத்தினார்
நூற்றுக்கும் மேற்பட்ட ஆடவர்களில்
ஒற்றை பெண்மணியாய் குரல்கொடுத்தார்...

நின்றுவிடாத அவர்சேவை
நிலபிரபுக்களின் பக்கம் திரும்பிடவே
தாழ்த்தப்பட்ட மக்களின் தரம் உயர
தங்கமகள் சேரிகளில் தடம் பதித்தார்....

சாட்டையால் அடிப்பதும்
சாணம் கரைத்து குடிக்க செய்வதும்
மனையாளை கணவன்முன் கற்பழிப்பதும்
நிலபிரபுக்களின் நீதியாக - அந்த
அநியாயத்தை எதிர்த்து போராடினார்...

ஆத்திரமடைந்த அதிகாரவர்க்கம்
வாழைமர தோப்புக்குள் வழிமறித்து
“பெண்ணாக இரு” என்று சொன்னபடி
பேயாக மாறியே தாக்கிசென்றனர்.....

அடிபட்ட வயலினைவிட - அந்த
வார்த்தையே வலித்தது மணியம்மைக்கு....

புரட்சிக்காக அலங்கரித்தவர் - அதே
புரட்சிக்காக தலைமயிர் மழித்து
கதர்வேட்டி சட்டை துண்ட ணிந்து
ஆண்களை போலவே உருமாறினார்
ஒற்றைகாளை பூட்டிய வண்டி - அதையும்
ஓட்டிப் பழகி கற்றுகொண்டார்....

ஆணாகவே தன்னை யெண்ணியவர்
அஞ்சாமல் துணிந்து போராடினார்
அயராத போராட்டம் மேற்கொண்டவர்
அடிமைத்தனம் ஒழிய பாடுபட்டார்

எத்தனை எத்தனை கொடுமைகள்
எண்ணிக்கையில்லா பொய்புகார்கள்
நீதிமன்றம் செல்வதும்
நியாயம் கேட்பதும் - அந்த
நேர்மையின் வாழ்க்கையாக மாறியது

ஒரு நள்ளிரவில் கைதாகி
சிறைசென்றவர் - அங்கும்
ஆயுட்கைதிகளின் அடிமைத்தனம் -
கண்டு
அவர்களுக்காகவும் போராடினார்...

இன்றும்
சிறையிலே பிறக்கும் குழந்தைகளுக்கு
சத்துணவும் உடையும் கொடுப்பதற்கு
காரணமானவர் இந்த சத்தியவதியே

இத்தனை கருணை நிறைந்தவரின்
கடைசி நொடியது மிகக்கொடிது
தப்பித்துவந்த கலைமானொன்று
அன்னையின் வயிற்றில் குத்தியது
இரத்த வெள்ளத்தில் அவர்
உயிரும் பிரிந்தது....

ஒவ்வொரு நொடியும் சேவைக்கேன்றே
ஒப்படைத்த மங்கையின் புகழ்பேச
வரலாற்று ஏட்டுக்கோ வார்த்தை பஞ்சம்...

பெரியாரின் மணியம்மை ப்போல -
யாவரும்
இந்த எளியாரின் தெய்வத்தை
அறிந்திடவில்லை
சரித்திரத்தின் சிகப்பு பக்கங்களில் - சிலர்
சாதனை முழுதாய் இடம்பெறுவதில்லை.....

தலைவர்கள் தலைவர்களென்று
போற்றுகிறோம்
அவர்கள் புகழுயர மாண்டவர்கள்
தகவலெங்கெ..?
அகிம்சையில் வந்தது சுதந்திரமானால் -
அதற்கு
விலையான வீரர்களின் விவரமெங்கெ...?

இன்னும் நாம் அறிந்திடாத
மணியம்மைகள் எத்தனை இங்கே...?

சாதித் தீண்டாமைக்கு எதிராகவும், தேச விடுதலைக்காகவும், பொதுவுடைமையின் போர்வாளாய் காவிரி வளநாட்டை காத்திட்ட ஒரு மாபெரும் களப் போராளி குறித்த கதை இது. ஒரு முட்பாதையில் குடும்ப உறவுகள், சமுதாய உறவுகள் எல்லாம் எதிர்ப்புக்களாக மாறிவிட்ட நிலையில், அரசியல் கட்சிகளின் (ஆண்) ஆதிக்கங்களையும் எதிர்த்து ஒரு பெண் தேசியவாதியாக, சமுதாயவாதியாக நின்று தாழ்த்தப்பட்ட பண்ணையடிமைகளுக்கும், உழைப்பாளருக்கும் நிதி கோரிப் போராடி இறுதியில் ஒரு தியாகியாகவே தன் இன்னுயிரையும் ஈந்தாள்.

தொடரும்



## 100 கைதிகளைப் பேட்டி கண்ட இளம் பெண் ஆய்வாளர் மதுமிதா பாண்டே

# ஓர் ஆண் எப்போது, எப்படி ரேப்பிஸ்ட்டாக மாறுகிறான்?

**கா**முகனும் காமக்கொடூரனும் காட்டில் பிறந்து தனியே வளர்ந்து வந்தவர்கள் அல்லர். அவர்களும் ஒரு தாயின் அரவணைப்பில் வளர்ந்த சாதாரண மனிதர்கள் தாம். பிறகெப்படி அவர்கள் வல்லுறவாளர்களாக (RAPIST) மாறினார்கள்? அவர்களது உளவியலின் வேர் எங்கிருந்து கிளம்புகிறது? இது குறித்த கள ஆய்வுகளும் உள ஆய்வுகளும் மிகவும் குறைவு.

டெல்லியில் மருத்துவ மாணவி நிர்பயா, வல்லுறவுக்கு ஆளாக்கிக் கொல்லப்பட்ட பின்னணியில் நிறைய விவாதங்கள் நடந்தாலும் ஓர் ஆண் எப்போது, எப்படி ரேப்பிஸ்ட்டாக மாறுகிறான் என்ற கோணத்தில் பெரிதாக விவாதங்கள் நடைபெறவில்லை. நோய்க்கான காரணத்தைக் கண்டுபிடிப்பதுதான் அதைக் குணப்படுத்துவதன் முதல்படி அல்லவா? இந்தக் கேள்விகளோடு மதுமிதா பாண்டே என்ற இளம் பெண் ஆய்வாளர் டெல்லி திகார் சிறைக்குச் சென்றார். சிறையில் இருந்த பாலியல் வல்லுறவுக் குற்றவாளிகளைச் சந்தித்தார். குற்றவியல் துறைக்கான டாக்டர் பட்ட ஆய்வேட்டுக்கான தரவுகளைப் பெறவே வல்லுறவுக் குற்றவாளிகள் நூறு பேருடன் அவர் உரையாடினார்.

அவர்கள் எல்லாம் அரக்கர்கள் என்ற எண்ணத்துடன் சிறைக்குள் போன அவர், அவர்களோடு பேசப்பேச அவர்களும் நம்மோடு வாழும் சாதாரண மனிதர்கள்தாம் என்பதைக் கண்டுகொள்கிறார். அது இன்னும் அவருக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது. நம்மைச் சுற்றி இருக்கும் சக மனிதர்களே சந்தர்ப்பங்களை உருவாக்கி அல்லது சந்தர்ப்பம் வாய்க்கும்போது வல்லுறவுக் குற்றம் புரிகின்றனர். அவர் சந்தித்த 100 குற்றவாளிகளில் எவருக்குமே தாம் செய்த கொடுமை குறித்த குற்றவுணர்வு இல்லை. தங்கள் செயலை நியாயப்படுத்தவே ஒவ்வொருவரும் முயன்றுள்ளனர். பெரும்பாலானோர் அந்தப் பெண்கள் மீதே குற்றம் சாட்டினர். 'அவள் என்னைத் தூண்டிவிட்டாள் என்றோ அவள் மறுக்கவோ எதிர்ப்புத் தெரிவிக்கவோ இல்லை, அதனால் அவள் சம்மதத்தோடுதான் நடந்தது' என்றோதான் அந்த நூறு பேரும் சொன்னதாக மதுமிதா குறிப்பிடுகிறார்.

குற்றவாளிகள் குறிப்பிடும் 'சம்மதம்' என்பது என்ன? பெண் குறித்த ஆண் மனத்தின் எண்ணற்ற கற்பிதங்களின் பட்டியலில் இந்தச் சம்மதமும் ஒன்று. 'அவள் வேண்டாம்னு சொன்னா வேணும்னு அர்த்தம். அவள் தொடாதேன்னு சொன்னா தொடுன்னு அர்த்தம்' என்ற ஆணுலக மொக்கைப் புரிதல் பரவலாக இருக்கிறது. பல தமிழ்த் திரைப்படங்களில் இத்தகைய காட்சிகள் வந்துகொண்டே இருக்கின்றன. பெண்ணின் காதல், காமம் ஆகியவை குறித்து நம் சமூகத்தில் உலவும் அத்தனை கருத்துக்களும் ஆண்களால் கட்டமைக்கப்பட்டவையே. இவை பாலியல் வல்லுறவை நோக்கி நகரும் ஆண் மனதுக்கு இதமாக ஒத்தடம் கொடுத்து ஊக்குவிக்கின்றன.



மதுமிதாவின் ஆய்வுக்குள் வந்த நூறு பேரில் 80 பேர் படிப்பறிவில்லாதவர்கள் அல்லது ஆரம்பப் பள்ளியைத் தாண்டாதவர்கள். எனில், அவர்கள் மனங்களில் இதுபோன்ற கருத்துகள் எப்படிப் போய்ச்சேர்ந்தன? ஒட்டுமொத்தமாக நம் சமூகத்தின் உளவியலே இப்படியாகத்தான் இருக்கிறது. ஆகவேதான் யாரும் கற்றுக்கொடுக்காமலேயே ஆண் மனம் பெண்ணுடல், பெண் மனம் குறித்த தவறான கற்பிதங்களை நூறு சதவீதம் உண்மையென நம்பிக்கொண்டிருக்கிறது. கூச்சமோ குற்றவுணர்வோ இல்லாமல் பாலியல் சீண்டல் தொடங்கி வல்லுறவுவரை ஈடுபட முடிகிறது.

மதுமிதாவின் பட்டியலில் 49-வது இடத்தில் உள்ள குற்றவாளி, ஐந்து வயதுப் பெண் குழந்தையை வல்லுறவு செய்தவன். அவனுடைய நேர்காணலில் "அவள் என்னைத் தொடக் கூடாத இடத்தில் தொட்டுச் சீண்டிக்கொண்டே இருந்தாள். அவளுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்று நினைத்தே அப்படிச் செய்தேன். இப்போது வருத்தப்படுகிறேன். கெட்டுப்போன அவளை இனிமேல் யாரும் கல்யாணம் செய்துகொள்ள மாட்டார்கள். சிறையிலிருந்து வெளியேறியதும் அவளை நானே திருமணம் செய்து கண்டிப்பாக வாழ்வளிப்பேன்" என்று 'பெருந்தன்மை'யோடு கூறுகிறான்.

அந்தக் குற்றவாளி சொன்ன தகவலின் அடிப்படையில் மதுமிதா அவனது கிராமத்துக்குச் சென்று பாதிக்கப்பட்ட குழந்தையையும் அக்குழந்தையின் அம்மாவையும் சந்தித்திருக்கிறார். அன்றாடம் கூலி வேலை செய்து பிழைக்கும் குடும்பம் அது. பெண்ணுக்கு இப்படி ஆனதால் தகப்பன் எங்கோ ஓடிப் போய்விடுகிறான். தாய் மட்டுமே இருக்கிறாள். அந்தக் குழந்தைக்கு இப்போது பத்து வயது. பள்ளிக்குப் போகிறாள். நன்றாகப் படிக்கிறாள். ஐந்து வயதில் தனக்கு நேர்ந்தது பற்றி இப்போது அவளுக்கு ஏதும் நினைவில்லை. அந்த நினைவே வராமல் தாய் அவளை வளர்க்கிறாள். குற்றவாளி சிறையில் இருக்கும் செய்திகூட அவர்களுக்குத் தெரியவில்லை. அந்தச் செய்தி கேட்டு ஆச்சர்யமும் மகிழ்ச்சியும் அடைகிறாள் அந்தத் தாய். இப்படியெல்லாம்கூட நம் நாட்டில் நடக்குமா என வியக்கிறாள். அறியாமையும் வறுமையும் பின்னிப் பிணைந்த இந்திய வாழ்க்கை இது போன்ற தருணங்களில் இன்னும் கூடுதல் அச்சத்தைத் தருகிறது.

அந்தத் தாய் பற்றி மதுமிதா எழுதியதை வாசிக்கையில் ஜெயகாந்தனின் 'அக்கினிப் பிரவேசம்' கதையில் வரும் தாய் நினைவுக்கு வந்தாள். கல்லூரிப் பெண் ஒருத்தியை காரில் ஏற்றி, மயக்கி, உறவுகொள்ளும் ஒரு பணக்காரன் அவளை காரிலேயே கொண்டுவந்து வீட்டில் விட்டுப் போகிறான். நடந்ததைச் சொல்லி அழும் அவளது தலையில் தண்ணீரைக் கொட்டிக் குளிக்க வைத்துப் பின் அந்தப் பெண்ணின் அம்மா கூறுவதாக வரும் பகுதி இது:

**"நீ சுத்தமாயிட்டே.. ஆமா.. தெருவிலே நடந்து வரும்போது எத்தனை தடவை அசிங்கத்தைக் காலிலே மிதிச்சுடறோம்... அதுக்காகக் காலையா வெட்டிப்போட்டுடறோம்? கழுவிட்டு பூஜை அறைக்குக்கூடப்போறோமே; சாமிவேண்டாம்னு வெரட்டவா செய்யறா? எல்லாம் மனசுதான்டி.. மனசு சுத்தமா இருக்கணும்.. ஒனக்கு அகலிகை கதை தெரியுமோ? ராமரோட பாதத்துளி பட்டு அவ புனிதமாயிட்டாள்னு சொல்லுவா, ஆனா அவ மனசாலே கெட்டுப்போகலை. அதனாலேதான் ராமரோட பாதத்துளி அவ மேலே பட்டுது. கெட்ட கனவு மாதிரி இதெ மறந்துடு.. உனக்கு ஒண்ணுமே நடக்கல்லே"**

குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித் தருவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் வன்முறைக்கு ஆளான பெண்ணுக்கு உளவியல் ரீதியான ஆறுதலும் சிகிச்சையும் அளிப்பது. உடல்ரீதியாக வேறெந்த உறுப்பின் மீதும் தாக்குதல் நடந்தால் எப்படி அதை நாம் கடக்கிறோமோ அப்படித்தான் பாலியல் வன்முறையையும் கடக்க வேண்டும் என்பதே ஜெயகாந்தன் சொல்லும் ஒரு தீர்வு. ஆனால், கதையில் வருவதைப் போல அவ்வளவு எளிதாகத் துடைத்துப் போட்டுவிட முடியுமா? அப்படித் துடைத்துப் போட நம் குழந்தைகளைப் பயிற்றுவிக்க முடியாதா என்ன? அதுவும் தேவைதானே?

– V.சிவசங்கரன்

# இயற்கையைக் காக்க மக்கள் இயக்கம் அவசியம் தானா?

வெள்ளத்தால் கேரளத்துக்கு ஏற்பட்ட சொத்துகளின் சேத மதிப்பு ரூ.26,000 கோடி என்று மதிப்பிடப்படுகிறது. இதற்கும் அப்பால் இயற்கை, மனித, சமூக மூலதன இழப்பு எவ்வளவு என்பதை எளிதில் மதிப்பிட்டுவிட முடியாது. கேரளத்தின் மலைவனங்கள், சதுப்பு நிலங்கள், ஆறுகள் ஆகியவற்றைச் சிதைத்து உருவாக்கிய கட்டிடங்களும் அணைகளும் கல் குவாரிகளும் தான் இந்த இழப்பை ஏற்படுத்தியுள்ளன. மறுவாழ்வு, நிவாரணப் பணிகளுக்குத்தான் இப்போது முன்னுரிமை என்றாலும் வெள்ளச் சேதத்துக்கான காரணங்கள் எவை என்பதையும் அடையாளம் கண்டாக வேண்டும்.

கேரளத்தில் மட்டும் அல்ல மேற்குத் தொடர்ச்சி மலையுள்ள அனைத்து மாநிலங்களிலும், நாட்டின் பிற பகுதிகளிலும்கூட இயற்கையை அழித்துவருகின்றனர். 1. இயற்கை வளத்தைக் காக்க உருவாக்கப்பட்ட சட்டங்கள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன. 2. மனிதவளம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. சுகாதார வசதிகள், வேலைவாய்ப்புகள் போதிய அளவு உருவாக்கப்படவில்லை. இதனால் இயற்கை வளம் பாதிக்கப்படும் என்று தெரிந்தும் வேலைவாய்ப்பு, வருமானத்துக்காகப் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. (பாலக்காடு மாவட்டத்தில் பிளாச்சிமடா பஞ்சாயத்தில் கோகா கோலா நிறுவனம் நீர்வளத்தை வணிகநோக்கில் வரம்பின்றி உறிஞ்சி எடுத்தது. இதனால் நீர்வளம் குறைந்ததுடன் மாசுபடவும் நேர்ந்தது. நீர்வள இழப்பு மட்டும் ரூ.160 கோடியாக மதிப்பிடப்பட்டது.) 3. வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக வழங்கப்பட்ட அறிவியல் சார்ந்த ஆலோசனைகள் அரசுகளால் தொடர்ந்து அலட்சியப்படுத்தப்பட்டன. ஆதிரப்பள்ளி நீர்மின்சார திட்டத்தை வகுத்தவர்கள் தண்ணீர்கிடைக்கும் அளவை மிகையாக மதிப்பிட்டுவிட்டார்கள். எனவே, அதில் கிடைத்த மின்சாரத்துடன் ஒப்பிடுகையில் அளவுக்கு அதிகமாகச் செலவு செய்து அணையைக் கட்டினார்கள். பராமரிப்புச் செலவும் அதிகமாகவே இருக்கிறது. 4. சமூக மூலதனத்தில் கடுமையான அழிவு ஏற்பட்டதை அரசுகள் லட்சியம் செய்யவில்லை.

மனிதர்கள் உருவாக்கிய மூலதனங்களை மட்டும் பார்க்கக் கூடாது. மனிதர்கள் உருவாக்கியவை, இயற்கை உருவாக்கியவை, மனிதர்களாலான மூலதனம், சமூகமாகிய மூலதனம் ஆகியவற்றை வளர்த்தெடுக்க வேண்டும். ஒரு பகுதியின் சுற்றுச்சூழலைக் கெடுக்காமல் பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை அங்கே வாழும் மக்களுக்குத்தான் இருக்கும் என்பதை இனி புதிய நிர்வாகத்தில் அங்கீகரிக்க வேண்டும். இயற்கை வளங்களைக் காக்க இப்போது எதிர்மறையான ஊக்குவிப்புகளைத்தான் அளிக்கிறோம். அதையும் ஊழலும் கெடுபிடியும் மிக்க அதிகாரவர்க்கம் மூலமாகவே அளிக்கிறோம். இது மாற வேண்டும்.

சுற்றுச்சூழலைப் பராமரிக்க வேண்டிய அனைத்துத் தரப்பினருக்கும், வெளிப்படையான விதத்தில் ஊக்குவிப்புகளை அளிக்க வேண்டும். மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிக்கு எங்களுடைய குழு அப்படிப் பல பரிந்துரைகளைக் கூறியிருக்கிறது. ‘சர்ப்ப காவுகள்’ என்று அழைக்கப்படும் பாம்புகளின் வசிப்பிடத்தைச் சிதையாமல் காக்க, அப்பகுதி மக்களுக்கு சேவைக் கட்டணம் தர வேண்டும். மண்ணில் கரித் தன்மையை அதிகரிக்க, ரசாயன உரங்களைப் பயன்படுத்தாமல் இயற்கை எருவை இட மானியம் தர வேண்டும்.

மக்களை உறுப்பினர்களாகக் கொண்ட பல்லுயிர்ப் பெருக்க மேலாண்மைக் குழுக்களை ஏற்படுத்த வேண்டும். அந்தக் குழுக்களே எல்லா நிர்வாகப் பணியையும் மேற்கொள்ள உரிய அதிகாரங்களையும் வழங்க வேண்டும். பல்லுயிர்ப் பெருக்கப் பகுதிகளை அணுக சுற்றுலாப் பயணிகளிடம் சேவைக் கட்டணம் வசூலிக்க வேண்டும். புதிய நடைமுறைகளுக்குப் பிறகு சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்களை





உள்ளது உள்ளபடி தொகுத்து அறிக்கை தயாரிக்க வேண்டும்.

வன உரிமைச் சட்டம் முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும். பழங்குடிகள் மட்டுமல்லாது வனங்களில் பாரம்பரியமாக வாழுவோர் அனைவரும் வனப்பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும், மேலாண்மை செய்யவும், மரம் அல்லாத இதர வனப் பொருட்களைச் சந்தைப்படுத்திக்கொள்ளவும் அனுமதிக்க வேண்டும். வனப் பகுதிகளில் மேற்கொள்ளும் வளர்ச்சிப் பணிகளால் சுற்றுச்சூழலுக்கு என்ன நேரிட்டது என்பதை உடனுக்குடன் இணையதளங்களில் பதிவேற்ற வேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி, இந்தத் தகவல்கள் மறைக்கப்படாமல் பெறப்பட வழி செய்ய வேண்டும். தகவல்களைத் திரிக்காமல் பதிவு செய்துவந்தால் சூழலுக்குக் கேடான அம்சங்களை உடனுக்குடன் களைந்துவிடலாம்.

மேற்குத் தொடர்ச்சி மலை சுற்றுச்சூழல் பற்றிய நிபுணர் குழுக்களின் அறிக்கைகள், கஸ்தூரிரங்கன் குழு அளித்த அறிக்கை, ஊம்மன் வி ஊம்மன் குழு அறிக்கை ஆகியவை மக்கள் பார்க்கும் வகையில் பதிவேற்றப்பட வேண்டும். தங்களுடைய பகுதியில் உள்ள நிலம் தனியாருக்குச் சொந்தமாக இருந்தாலும், அரசுக்குச் சொந்தமாக இருந்தாலும் அந்த நிலம் எப்படிப் பயன்படுத்தப்படுகிறது, அதில் உள்ள தாவரங்கள் எப்படிப்பட்டவை, அதன் நீரியியல் தன்மை என்ன, அந்த சுற்றுவட்டாரம் எப்படிப்பட்டது என்ற ஆவணங்களை இனி உள்ளாட்சி மன்றங்கள் தயாரித்து தங்கள் பொறுப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். சுற்றுச்சூழலைக் காக்கும் பெரும் பொறுப்பை அந்தந்த உள்ளாட்சி மன்றங்களும் பகிர்ந்துகொள்ள வேண்டும். நிலங்களின் தன்மைக்கேற்ற பொருத்தமான மேலாண்மை நடைமுறைகளை உள்ளாட்சி மன்றங்கள் பரிந்துரைக்கலாம். சுற்றுச்சூழலைக் காக்க ‘ஸ்மார்ட்போன்’ போன்ற நவீனத் தகவல் தொடர்பு சாதனங்களைக்கூட மக்களும் உள்ளாட்சி அமைப்புகளும் பயன்படுத்த வேண்டும். உள்ளூர் நிலப்பகுதிக்கும் பருவங்களுக்கும் ஏற்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வளர்ச்சி திட்டங்களை வகுப்பதில் மக்களும் உதவ வேண்டும்.

*1990*-களில் கேரளத்தில் தொடங்கப்பட்ட ‘மக்கள் திட்ட இயக்கம்’ போல அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு-வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்போதைய நிதியமைச்சரான தாமஸ் ஐசக் இதை அப்போது தலைமையேற்று நடத்தினார். இதை ஐசக் மீண்டும் புதுப்பிக்க வேண்டும். அதன் மூலம் மட்டுமே கேரள மக்களால் பழைய இயற்கைச் சூழலை மறு உருவாக்கம் செய்வதுடன், காப்பாற்றவும் முடியும். கேரள அரசு இத்தகைய முற்போக்கான அணுகுமுறையைக் கையாள வேண்டும். அதன் மூலம்தான் எதிர்காலத்தில் இதைப்போன்ற அதிக மழை வெள்ளப் பெருக்கு ஏற்படும்போது முழுக்க இல்லாவிட்டாலும், ஓரளவுக்காவது சேதங்களைக் குறைத்துக்கொள்ள முடியும்.

**- K. ரமேஷ்குமார்**



# சிந்தனை முத்துக்கள்



முள்ளு குத்திவிட்டது என்று சொல்பவர்கள் தான் அதிகம். முள்ளை என் காலால் மிதித்து விட்டேன் என்று சொல்பவர்கள் குறைவு.
தவறு செய்பவர்கள் அதை ஏற்றுக் கொள்வதை விட அதை சமாளிக்கவே செய்கிறார்கள்..









#பச்சோந்தி ஒன்று தற்கொலை செய்யும் முன் ஒரு கடிதத்தில் இப்படி எழுதி இருந்தது

#நிறம் மாறும் போட்டியில் மனிதர்களிடம். நான் தோல்வி அடைந்தேன்





நாம் - முதல் தலைமுறை
தந்தை + தாய் - இரண்டாம் தலைமுறை
பாட்டன் + பாட்டி - மூன்றாம் தலைமுறை
பூட்டன் + பூட்டி - நான்காம் தலைமுறை
ஓட்டன் + ஓட்டி - ஐந்தாம் தலைமுறை
சேயோன் + சேயோள் - ஆறாம் தலைமுறை
பரன் + பரை - ஏழாம் தலைமுறை
பரன் + பரை = பரம்பரை
ஒரு தலைமுறை - சராசரியாக 60 வருடங்கள் என்று கொண்டால்,ஏழு தலைமுறை - 480 வருடங்கள்..ஈரேழு தலைமுறை - 960 வருடங்கள்.. (கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்கள்)ஆக, பரம்பரை பரம்பரையாக என்று சொல்வதன் பொருள் ஈரேழு, பதினான்குதலைமுறையாக என்று பொருள் வரும்.
வேறெந்த மொழிகளிலும் இப்படி உறவு முறைகள் இல்லை..
இதுவும் தமிழுக்கு ஒரு தனிச் சிறப்பு!..











## தமிழ் மொழி

தடுக்கி விழுந்தால் மட்டும் **அ... ஆ...**
சிரிக்கும்போது மட்டும் **இ... ஈ...**
சூடு பட்டால் மட்டும் **உ... ஊ...**
அதட்டும்போது மட்டும் **எ... ஏ...**
ஐயத்தின்போது மட்டும் **ஐ...**
ஆச்சரியத்தின்போது மட்டும் **ஒ... ஓ...**
வக்கணையின் போது மட்டும் **ஔ...**
விக்கலின்போது மட்டும் **ஃ...**
என்று தமிழ் பேசி மற்ற நேரம்
வேற்று மொழி பேசும்
தமிழரிடம் மறக்காமல் சொல்
உன் மொழி தமிழ் மொழியென்று !!!

மனைவி : அத்தான்.. சிவன் - பார்வதி உள்ள புகைப் படத்தில், சிவனின் கையில் திரிசூலம் உள்ளது.

விஷ்ணு லக்ஷ்மி உள்ள புகைப் படத்தில், விஷ்ணுவின் கையில் சக்கரம் உள்ளது.

ராமர் சீதை உள்ள புகைப் படத்தில் ராமரின் கையில் வில் உள்ளது.

ஆனால் கிருஷ்ணன் ராதை உள்ள படத்தில் புல்லாங்குழல் உள்ளது, ஏன்? என்றாள்.

கணவன் : அன்பே.. நீ குறிப்பிட்ட முதல் மூன்று தெய்வங்களும் மனைவிகளுடன் இருக்கிறார்கள். எனவே அவர்கள் ஆயுதத்துடன் இருக்கிறார்கள்.

கிருஷ்ணர் காதலியுடன் இருக்கிறார் எனவே ஆயுதம் தேவை படவில்லை.

இதன் மூலம் தெரிய வரும் கருத்து என்னவென்றால், தெய்வமே ஆனாலும் மனைவியுடன் இருக்கும் போது பாதுகாப்பிற்கு ஆயுதம் அவசியம் தேவை என்பதுதான் ...





## விவசாயிகளுக்கு உதவுகிறதா?

# தேசிய விவசாயிகள் ஆணையம்

விவசாயிகளின் போராட்டங்கள் எதுவென்றாலும் பிரதானமாக இருப்பது, 'சுவாமிநாதன் குழுவின் பரிந்துரையின்படி குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயம் செய்ய வேண்டும்' என்பதாகும். சுவாமிநாதன் குழு என்று அறியப்படும் தேசிய விவசாயிகள் ஆணையத்தின் பரிந்துரைகள் என்று சுட்டிக்காட்டப்படுவது 'குறைந்தபட்ச ஆதரவு விலையானது ஒட்டு மொத்த செலவு மற்றும் அந்தச் செலவில் 50% சேர்த்து நிர்ணயம் செய்வது' என்பதாக மட்டுமே இருக்கிறது. இன்றைக்கு விவசாயிகள் போராடும் பல்வேறு கோரிக்கைகளையும் அலசி ஆராய்ந்து அவற்றுக்கும் ஆலோசனைகளை தேசிய விவசாயிகள் ஆணையம் தந்துள்ளது.

நாட்டில் விவசாயத்தில் நெருக்கடி மிகுந்தும் அதன் காரணமாக விவசாயிகளின் தற்கொலைகள் அதிகமாகவும் இருந்த காரணத்தினால் இந்திய அரசால் 2004-ல் பேராசிரியர் சுவாமிநாதன் தலைமையில் எட்டுப் பேர் கொண்ட தேசிய விவசாயிகள் ஆணையம் அமைக்கப்பட்டது. 20 மாநிலங்களில் விவசாயிகளோடும் வேளாண் மற்றும் ஏனைய அறிவியல் அறிஞர்களோடும் கலந்துரையாடி இந்த ஆணையம் தனது பரிந்துரைகளைக் கொடுத்தது. அந்தப் பரிந்துரைகள் 5 அறிக்கைகளாக 2004 முதல் 2006 வரை வெளியிடப்பட்டது. இதன் இறுதி அறிக்கை அக்டோபர் 2006-ல் மைய அரசிடம் கொடுக்கப்பட்டது.

ஆணையத்தின் பரிந்துரைகளாவது, நிலச் }சீர்திருத்த சட்டங்களின் மூலம் கையகப்படுத்தப்பட்ட உபரி நிலங்களை, நிலமற்ற விவசாயிகளிடம் பகிர்ந்தளிக்க வேண்டிய அவசியம் மற்றும் காடுகளின் மீதான மலைவாழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதன் முக்கியத்துவத்தை விவரிக்கின்றது. மிக முக்கியமாக, நில உபயோக ஆலோசனை நிலையத்தோடு இணைந்து செயல்படுவதன் மூலம், தட்பவெப்ப நிலைக்கேற்ற, சந்தையின் செயல்பாடுகளுக்கேற்ற பயிர்கள் பயிரிடப்படுவதைக் கிராம அளவில் உறுதிசெய்ய முடியும்.

சர்வதேச வர்த்தக நிறுவனம்போல, இந்திய அளவில் இந்திய வர்த்தக நிறுவனம் (ஐடிஓ) என்ற ஒன்று இந்திய அளவில் ஏற்படுத்தப்பட வேண்டும். இதன் முக்கிய வேலை என்பது, சந்தை நிலவரங்களை ஆராய்வது, எந்தெந்தப் பயிர்களின் உற்பத்தி அதிகமாக இருக்கும், எவற்றில் தேவையைவிட குறைந்திருக்கும், அவ்வாறு இருப்பின் சந்தை விலையை எவ்வாறு கட்டுப்படுத்துவது போன்ற ஆய்வினை மேற்கொள்வது. அதாவது, ஐடிஓ மற்றும் தேசிய நில உபயோக ஆலோசனை சேவை மையம் இரண்டும் இணைந்து செயல்படுத்துவதன் மூலம், வேளாண் பொருட்கள் உரிய விலையில் கிடைப்பதை உறுதிசெய்வதோடு, 'தேவைக்கேற்ற உற்பத்தி'யைக் கொண்டு விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கவும் வழிவகை செய்கின்றது.

மற்றொரு முக்கியமான பரிந்துரை, விவசாயிகளை உள்ளடக்கிய வேளாண் ஆராய்ச்சிகளை மேம்படுத்த வேண்டும் என்பதாகும். அதாவது, வேளாண் தொடர்பான ஆராய்ச்சிகளில் விவசாயிகளின் கருத்துகள் மற்றும் தேவைகள் கேட்டறியப்பட்டு, அதற்கேற்ப ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதோடு, ஆராய்ச்சி முடிவுகளைக் களத்துக்குக் கொண்டு செல்லும் விவசாய அறிவியல் நிறுவனங்களில் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் தொடர்பான ஒரு துறை இருக்க வேண்டும். இதன் மூலம் அந்தந்தப் பகுதிகளில் பயிரிடப்படும் பயிர்களின் அறுவடைக்குப் பிந்தைய நடவடிக்கைகளில் மாற்றங்கள் செய்வதன் மூலம் எவ்வாறு அதிகபட்ச விலையை விவசாயிகளுக்குத் தருவதென்பதைக் கண்டறிய முடியும்.



ஒவ்வொரு விவசாயக் குடும்பத்துக்கும் மண் வள அட்டை தரப்பட வேண்டும். இந்த அட்டையில், அந்தந்த குடும்பத்திடம் உள்ள விவசாய நிலங்களின் அறிவியல் தன்மைகள் (மண் கட்டுமானம், பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துகள், மண்புழுக்களின் அளவு) விவரிக்கப்பட வேண்டும். எனவே, இதன் அடிப்படையில் பயிர்கள், இடுபொருட்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை விவசாயிகள் மேற்கொள்ள முடியும். தேர்ந்த பயிர் நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் ஒவ்வொரு விவசாயிக்கும் கிடைக்க, ஒவ்வொரு கிராமத்துக்கும் ஊரகத் தகவல் மையம் அமைக்கப்பட வேண்டும். இந்த மையங்கள், வட்டார அளவில் உள்ள ஊரக வள மையத்தோடு இணைந்து விவசாயிகளுக்குத் தேவையான தகவல்களைக் கொண்டுசேர்க்கும்.

விவசாயக் கடன்களைப் பொறுத்தமட்டில் எல்லோருக்கும் நிறுவனக் கடன்கள் சென்றடைவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். இதன் மூலம் கொள்ளை வட்டியில் தரப்படும் தனியார் கடன்களை விவசாயிகள் பெறுவதைத் தவிர்க்க முடியும். மேலும், நிறுவனக் கடன்கள் 4% வட்டியில் விவசாயிகளுக்கே தரப்பட வேண்டும். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் விளை பொருட்கள் உரிய நேரத்தில் அரசாங்கத்தின் மூலம் கொள்முதல் செய்தல் அவசியம். இதற்கான கொள்முதல் நிலையங்கள் போதிய அளவில் இருப்பதையும், அவை சரியான சமயத்தில் செயல்படுவதையும் அரசு உறுதிசெய்ய வேண்டும்.. குறிப்பாக, விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை என்பது விவசாயிகளின் அனைத்துச் செலவுகளையும் உள்ளடக்கியதோடு அதிலிருந்து 50% சேர்த்து நிர்ணயம் செய்ய வேண்டும்.

இதுமட்டுமல்ல, விளைவிக்கப்படும் ஊட்டச் சத்துமிக்க பொருட்களுக்கான சந்தைகளை உறுதி செய்யும் விதமாக, பொதுவிநியோகத் திட்டம் விரிவாக்கப்பட வேண்டும். அதாவது, அரிசி மற்றும் கோதுமை மட்டுமல்லாது சிறுதானியங்கள் மற்றும் ஏனைய ஊட்டச்சத்து மிக்க விளைபொருட்களையும் விநியோகத் திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

வளங்குன்றாத வேளாண் நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் காரணிகள், தகவல் தொழில் நுட்பங்களை செம்மையாகப் பயன்படுத்துவது, பெண்களுக்கான பங்கினை உறுதிசெய்வது, பாரம்பரிய அறிவு மற்றும் விவசாய முறைகளைக் கண்டறிந்து பாதுகாப்பதென விவசாயிகளின் மேம்பாட்டுக்கான பல்வேறு ஆலோசனைகளைத் தேசிய விவசாயிகள் ஆணையம் கூறியுள்ளது. அதைக் குறைந்தபட்ச ஆதரவு விலை என்ற ஒற்றைப் பரிந்துரைக்குள் சுருக்கிவிடக் கூடாது.

**- M. தரணி**

**நிருபர்கள் தேவை**
பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்
துடிப்பான, உண்மையை வெளிக்கொணர
சேவை மனப்பான்மையுடன்
பணியாற்ற மாவட்ட வாரியாக
**ஆண்/பெண் நிருபர்கள் தேவை**
தொடர்புக்கு
**மக்கள் விசாரணை * அருணை முரசு**
Cell : 93821 33334 / 044 - 4861 5321
Email : writermouriyan@gmail.com

# வங்கி தொடர்பான “ஆப்களை” பயன்படுத்தும்போது

# கவனம் அவசியம்

தொழில்நுட்பம் ஒரு வேலையைச் செய்து முடிக்க எளிதான வழிகளைத் திறந்து விட்டிருக்கிறது துரதிஷ்டவசமாக இது திருடர்களுக்கும் வாய்ப்பாக அமைந்து விடுகிறது. குறிப்பாக வங்கி விஷயத்தில். வங்கிக்குச் சென்று காத்திருந்து பணம் அனுப்பியதை ஒரே நிமிடத்தில் எந்த இடத்திலிருந்தும் யாருக்கு வேண்டுமானாலும் அனுப்ப முடியும் என்று மாற்றிக் காட்டியிருக்கின்ற மொபைல் பேங்கிங் ஆப்கள். இதில் வங்கிகளின் அதிகாரபூர்வ ஆப்களைப் பயன்படுத்துவதில் எந்த வித பிரச்னையும்ஏற்படுவதில்லை. ஆனால், சில போலி ஆப்களால் வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை இழக்க நேரிடலாம். சமீபத்தில் இந்தியாவின் முன்னணி வங்கிகளின் போலி ஆப்கள் ப்ளே ஸ்டோரில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது பலரையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது.


ஆன்டி வைரஸ் மென்பொருள் தயாரிப்பில் முன்னணி வகிக்கும் நிறுவனங்களில் ஒன்றான ESET இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அதன்படி இந்தியாவின் பிரபலமான வங்கிகளான ICICI வங்கி, RBL வங்கி, மற்றும் HDFC வங்கி ஆகியவற்றின் போலி ஆப்கள் கூகுள் ப்ளே ஸ்டோரில் இருந்ததைக் கண்டுபிடித்திருக்கிறது. குறிப்பிட்ட மூன்று வங்கிகளின் கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்துபவர்களைக் குறிவைத்து போலி ஆப்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. கிரெடிட் கார்டின் லிமிட்டை அதிகப்படுத்தும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் இவை பயனாளர்களின் தகவல்களை எளிதில் திருடுவதற்கு வாய்ப்பாக அமைகின்றன. இந்த ஆப்கள் கடந்த மாதத்திலும், இந்த மாதத்திலும் ப்ளே ஸ்டோரில் அப்லோடு செய்யப்பட்டிருக்கின்றன. ESET நிறுவனம் செய்த எச்சரிக்கையைத் தொடர்ந்து அவை நீக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதற்குள்ளாக இந்தப் போலி ஆப்களை நூற்றுக்கணக்கானோர் இன்ஸ்டால் செய்திருக்கிறார்கள். எனவே அவர்களின் தகவல்கள் திருடப்பட்டுத் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இது போன்ற ஆப்கள் செயல்படும் விதம் மிக எளிமையானது. தோற்றத்தில் அதிகாரபூர்வ ஆப்களைப் போலவே இவை வடிவமைக்கப்பட்டவை. இதை இன்ஸ்டால் செய்யும் போதும், பயன்படுத்தும் போதும் எந்த வித சந்தேகமும் எழாதவாறு உருவாக்கப்பட்டிருக்கும். இதைப் பயன்படுத்துபவர்கள் இது தெரியாமல் பயன்படுத்தத் துவங்குவார்கள். இதனுள்ளே வழக்கம் போல தகவல்களை நிரப்புவதற்கான இடம் கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால், அவை அனைத்தும் போலியானவை, அது தெரியாமல் அதில் கேட்கப்பட்டிருக்கும் தகவல்களை நிரப்பிச் சமர்ப்பித்தால் அவை தவறானவர்களின் கைகளுக்குச் சென்று விடும்.

தற்பொழுது ப்ளே ஸ்டோரிலிருந்து நீக்கப்பட்டு விட்ட இவை எப்படிச் செயல்படுகின்றன எனவும், தகவல்கள் எப்படித் திருடப்படுகின்றன என்பதைப் பற்றி ESET நிறுவனம் வீடியோ ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அதில் தகவல்கள் முழுமையாகப் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் கூட அதைச் சமர்ப்பிக்கும் போது அதை ஏற்றுக்கொண்டு அதற்கான உறுதி செய்தியும் காட்டப்படுகிறது. இதே அதிகாரபூர்வ ஆப் என்றால் அவசியமான தகவல்களை தரவில்லை என்றால் அடுத்த கட்டத்திற்கு செல்ல முடியாது. ஆனால் இது போலி என்பதால் தகவலைத் தரவில்லை என்றாலும் கூட அடுத்த கட்டத்திற்கு



மூன்று வங்கிகளின் போலி ஆப்கள்




செல்கிறது. இதில் பதிவிடப்படும் தகவல்கள் அனைத்தும் இதை உருவாக்கியவரின் சர்வருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

அதன் இணையதள முகவரிக்குச் செல்லும்போது திருடப்பட்ட தகவல்களைப் பார்க்க முடிகிறது. குறிப்பிட்ட இணையதள முகவரி இருந்தால் இந்தத் தகவல்களை யார் வேண்டுமானாலும் அணுக முடியும். எனவேதான் இது மிகவும் அபாயகரமான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. இந்த மூன்றும் வேறு வேறு ஆப் ஆக ப்ளே ஸ்டோரில் அப்லோடு செய்யப்பட்டிருந்தாலும் இதை ஒருவரே உருவாக்கியிருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது. கூகுள் நிறுவனம் எவ்வளவு பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றினாலும் இத்தகைய போலியான ஆப்கள் அவ்வப்போது ப்ளே ஸ்டோரில் பதிவேற்றம் செய்யப்பட்டு விடுகின்றன. எனவே ஆப்களை பாதுகாப்பாகப் பயன்படுத்துவது என்பது நமது கையில்தான் இருக்கிறது.

மொபைல் பேங்கிங் ஆப்களைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை.

ஒரு ஆப் அதிகாரபூர்வமானதுதானா என்பதை உறுதி செய்வது மிக அவசியமானது. ப்ளே ஸ்டோரில் அப்படிக் கண்டுபிடிப்பதற்கு சிரமமாக இருந்தால் எளிதான வழி ஒன்று இருக்கிறது.

வங்கியின் அதிகாரபூர்வ இணையதளத்தில் ஆப்பிற்கான லிங்குகள் கொடுக்கப்பட்டிருக்கும். அதை க்ளிக் செய்வதன் மூலம் ப்ளே ஸ்டோரிலிருந்து டவுன்லோடு செய்யலாம்.

இன்ஸ்டால் செய்வதற்கு முன்னர் டவுன்லோடு எண்ணிக்கை, ரேட்டிங், ரிவ்யூஸ் ஆகியவற்றை ஒரு முறை பரிசோதித்துக் கொள்ளலாம்.

வழக்கமாகக் கேட்கப்படும் விவரங்களைத் தவிர்த்து தேவையற்ற தகவல்களைக் கேட்பது போலத் தெரிந்தால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஆப்பைப் பயன்படுத்துவதில் சந்தேகம் இருந்தால் அதை நன்கு பயன்படுத்தத் தெரிந்தவர்களிடமோ அல்லது வாடிக்கையாளர் சேவை மையத்தைத் தொடர்பு கொண்டோ தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

இயங்குதளத்தை அடிக்கடி அப்டேட் செய்வது அவசியம். அதற்கு வாய்ப்பில்லையென்றால் ஆன்டி வைரஸ் ஆப்களை இன்ஸ்டால் செய்து பயன்படுத்தலாம்.

- R.ஜெயா

சிறப்புப் பார்வை

# நீதிக்கு வந்த சோதனை?

## உடைபடும் ஜனநாயகம்!

சட்டமன்ற உறுப்பினர் வரம்பு அறிந்து பேசவேண்டும், அதே வேளையில் கருணாஸை கைது செய்துள்ள போலீஸார் ஹெச்.ராஜாவையும், எஸ்.வி.சேகரையும் கைது செய்யாதது ஏன் என்று ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார். இதுகுறித்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கை: 'மக்கள் பிரதிநிதிகளின் பேச்சுகள் எந்தச் சூழ்நிலையிலும் வரம்பு மீறும் வகையில் இருக்கக்கூடாது என்பதிலும், பொது அமைதியையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்டவேண்டிய பொறுப்பு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பெருமளவுக்கு இருக்கிறது என்பதிலும், இரு வேறு கருத்துகளுக்குஇடமே இல்லை.



ஆனால் அதே நேரத்தில், சட்டமன்ற உறுப்பினர் கருணாஸ், தான் தெரிவித்த கருத்துக்கு வெளிப்படையாக வருத்தம் தெரிவித்த பிறகும், அவரைவேண்டுமென்றே கைது செய்திருப்பது, தமிழ்நாட்டில் சட்டத்தின் ஆட்சி," ஆளுக்கொரு நீதி வேளைக்கொரு நியாயம்" என்ற நிலையில் தான் அமல்படுத்தப்படுகிறது என்பது தெளிவாகிறது.

தந்தை பெரியார் சிலையை உடைப்பேன் என்றும், உயர்நீதிமன்றத்தையும், தமிழ்நாடு காவல்துறையையும் ஒட்டுமொத்தமாக மிகவும் கேவலமாகவும் தரக்குறைவாகவும் விமர்சித்த தாலும், இந்து சமய அறநிலையத்துறை ஊழியர் களின் இல்லத்தரசிகளைப் பற்றி அநாகரிகமான முறையில் பேசியதாலும், பல்வேறு காவல் நிலையங்களில்வழக்குப் பதிவு செய்யப்பட்டும், இதுவரை பா.ஜ.க. தேசியச் செயலாளர் எச். ராஜா கைது செய்யப்படவில்லை.

அவர் காவல்துறைக்கே காவல்துறையைக் கட்டுப்படுத்தும் தமிழக அரசுக்கே சவால் விடும் வகையில் "நான் தலைமறைவாகவில்லை" என்று மேடைதோறும் பேசி, அதற்கு காவல்துறை அதிகாரிகளே பாதுகாப்பு வழங்கி வருவது என்னவகை நியாயம் என்று புரியவில்லை.

அதேபோல், பெண் பத்திரிக்கையாளர்கள் குறித்து மிகவும்இழிவான கருத்துகளை வெளியிட்ட எஸ்.வி.சேகரின் முன் ஜாமின் மனு உயர்நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டு, உச்சநீதிமன்றமே கைது செய்ய தடை விதிக்க மறுத்தும்கூட, அவரை அ.தி.மு.க அரசு கைது செய்யத் தயக்கம் காட்டுவது, என்ன வகை அணுகுமுறை என்றும் விளங்கவில்லை.

ஆகவே, திரு கருணாஸுக்கு ஒரு சட்டம், எச்.ராஜா மற்றும் எஸ்.வி.சேகருக்கு ஒரு சட்டம் என்ற அ.தி.மு.க அரசின் பாகுபாடான போக்கு மிகவும் அநீதியானது, கண்டிக்கத்தக்கது. ஒரு போலீஸ் அதிகாரியை விமர்சித்தது குற்றம் என்றால், ஒட்டுமொத்த காவல்துறையையும், உயர்நீதிமன்றத்தையும் மிக மோசமாக விமர்சித்த எச். ராஜாவை கைது செய்யாததைப் பார்க்கும் போது, எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சராக்கிய "கூவத்தூர் மர்மமும் ரகசியமும்" வெளிச்சத்துக்கு வந்துவிடக்கூடாது; தமிழ்மக்களின் ஏச்சையும் பேச்சையும் இதிலாவது தவிர்க்க வேண்டும்; என்ற காரணத்திற்காகவே கருணாஸை கைது செய்திருக்கிறார்கள் என்றேகருதுகிறேன்.

உலை வாயை மூடும் அற்ப எண்ணம் இதுவாகும். அ.தி.மு.க அரசில் "சட்டத்தின் ஆட்சி" குரங்கு கையில் கிடைத்த பூ மாலை போல், சிதறிச் சின்னாபின்னமாகிக்கொண்டிருப்பதைக் கண்டு, பொதுமக்கள் வெட்கித் தலைகுனிகிறார்கள்! எனவே, கைது செய்ய வேண்டியவர்களை, அவர்களுடைய பின்னணியைப் பற்றியெல்லாம்கவலைப்படாமல், தாமதிக்காமல் கைது செய்ய வேண்டும்; விடுவிக்க வேண்டியவர்களை உடனே விடுவிக்க வேண்டும்." இவ்வாறு திமுக தலைவர்ஸ்டாலின்அறிக்கையில்தெரிவித்துள்ளார்.



### கைது நடவடிக்கை பாரட்சம்: தினகரன்

போலீசாருக்கு எதிராக பேசியதாக கருணாஸ் கது செய்யப்பட்டுள்ள நிலையில், எச்.ராஜவை ஏன் இதுவரை கது செய்யவில்லை என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி. தினகரன் கேல்வி எழுப்பியுள்ளார். தமிழக அரசு கது நடவடிக்கையில் பாரபட்சமாக செயல்பட்டு வருகிறது. கருணாஸை உடனடியாக கைது செய்த போலீஸார், நீதிமன்றம் மற்றும் காவல்துறை குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளைக் கூறிய எச்.ராஜாவை ஏன் கைது செய்யவில்லை?



இதற்கு, மத்திய அரசின் அடிமையாக தமிழக அரசு இருப்பதே காரணம். அதனை மீண்டும் ஆட்சியாளர்கள் நிரூபித்துள்ளனர். காவல்துறை மீது கருணாஸ் பேசியதை ஒருவிதத்தில் சரியானதாகவும் எடுத்துக் கொள்ளலாம். காவல்துறைக்கு கல்லீரல் அழுகிப் போய்விட்டது என்று எச்.ராஜா கூறியதை ஏற்றுக்கொள்கிறேன். தமிழகத்தில் தேசிய கட்சிகள் எந்த காலத்திலும் ஆட்சி அமைக்க முடியாது. இவ்வாறு டிடிவி. தினகரன் கூரினார்.

### எச்.ராஜா மீது நடவடிக்கை: அமைச்சர் உறுதி

எச்.ராஜா மீது தக்க நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வருவாய்த் துறை அமைச்சர் ஆர்பி. உதயகுமார் தெரிவித்தார். திருப்பரங்குன்றம் இடைத்தேர்தல் தொடர்பாக அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மதுரை வடக்குத் தொகுதி சட்டப் பேரவை



உறுப்பினர் அலுவலகத்தில், எம்எல்ஏ விவி. ராஜன்செல்லப்பா தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசிய வருவாய்த் துறை அமைச்சர் ஆர்பி.உதயகுமார் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

"இலங்கையில் தமிழர்கள் படுகொலைக்கு திமுக, காங்கிரசே காரணம் என அந்நாட்டு முன்னாள் அதிபர் ராஜபக்சே அண்மையில் கூறியுள்ளார். இதையடுத்து அந்த 2 கட்சிகளையும் கண்டித்து தமிழகம் முழுவதும் வரும் 27-ம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம்.

சட்டம் என்பது அனைவருக்கும் சமம். இது எந்த வகையில் செயல்படுமோ அதன்படியே செயல்படும். மு.க.ஸ்டாலின் சொல்லியே ஒரு சட்டம் செயல்பட வேண்டும் என்கிற அவசியம் ஒன்றுமில்லை. நடிகர் கருணாஸ் எம்எல்ஏ பொதுவெளியில் தவறாகப் பேசியதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எச்.ராஜா விவகாரத்தில் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து, அதற்கான ஆதாரங்களைத் திரட்டி வருகின்றனர். தக்க நேரத்தில் அவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்துள்ள நாங்களே, திருப்பரங்குன்றம் தொகுதியில் வெற்றி பெற்றுக் காட்டுவோம்'' என்றார்.

- ஆசிரியர்

- கவிஞர் நிவேதிதா

## தாய்...

எனதருமை மகனே!
எனதருமை மகனே!
நான் உன்னை
மிகவும் நேசிக்கிறேன்...

முதுமையின் வாசலில் - நான்
முதலடி வைக்கையில்
தள்ளாட்டம்
என்மீது வெள்ளோட்டம்
பார்க்கும்...
கொஞ்சம் பொறுமை
கொள்க!
அதிகம் புரிந்து கொள்க!

என் முதுமை பார்த்து
முகம் சுளிக்காதே!
நான்
சாப்பிடுகையில் கைநடுங்கி
சாதம் சிந்தி விட்டேனா?
சத்தம் போடாதே...
உனக்கு நான்
நிலாச்சோறு ஊட்டிய
நாட்களை நினைவு
கூர்க!

ஆடை மாற்றுகையில்
அவதிப் படுகிறேனா?
அசுத்தம் செய்து விட்டேனா?
ஆத்திரப்படாதே...
படுக்கை முழுதும்
நீ பண்ணிய ஈரங்களின்
ஈர நினைவுகளை
இதயம் கொள்க!



ஒரே பேச்சை, தேய்ந்த
ஒலிநாடா போல்
ஓயாமல் சொல்கிறேனா?
சலித்துக் கொள்ளாதே...
ஒரே
மாயாவி கதையை
ஒரு நூறு முறை
எனை படிக்கச் சொல்லி
நீ
உறங்கிய
இரவுகளை ஞாபகம்
கொள்க!

நான் குளிக்க மறுக்கிறேனா?
சோம்பேறித்தனம் என்று
சுடுசொல் வீசாதே...
உன்னை
குளிக்க வைக்க
நான் செய்த யுக்திகளை
எனக்காக புதுப்பித்துத் தருக!

புதிய தொழில்நுட்பம்,
புதிய பயன்பாடுகள் - உன்
புயல் வேகப் புரிந்துகொளல்
சத்தியமாய் எனக்குச்
சாத்தியமில்லை!
கேவலப் படுத்தாதே...
கற்றுத் தருக!
கவனித்துப்
பழக அவகாசம் தருக!

இனி,
சில நேரங்களில் - என்
நினைவுப் பிரழ்ச்சியால்
ஞாபங்கள் அறுந்து
போகலாம்,
உரையாடல் உடைந்து
போகலாம்!
நிறைய வேலை
இருக்கிறதென்று
நேரம் பார்க்காதே...
என் அருகிருந்து
ஆற்றாமை தேற்றுக!
ஆசுவாசப் படுத்துக!

என் கால்கள்
என்னை ஏமாற்றுகையில்
நீ
முதல் நடை பழக
என் விரல்
நீண்டது போல்
கைகொடுத்து
எனக்கு உதவி செய்க!

ஒரு நாள் சொல்வேன் நான்,
வாழ்ந்தது
போதுமென்று!
வருத்தப் படாதே.....
சில
வயது வரை வாழ்க்கைக்கு
அர்த்தமில்லை...
சில
வயதுக்கு மேல்
வாழ்வதில் அர்த்தமில்லை...
காலம்
வரும்போது - இதை
நீயும்
புரிந்து கொள்வாய்!

இனி நான்
வேண்டுவதெல்லாம்
நீ எனை
புரிந்து கொண்ட
புன்னகை!
மீண்டும் மீண்டும்
சொல்கிறேன்!

எனதருமை மகனே!
நான் உன்னை
மிகவும் நேசிக்கிறேன்...
என் வாழ்வு
அமைதியோடும் - உன்
அரவணைப்போடும்
முற்று பெற
முயற்சியேனும்
செய்வாயா...?



# தீர்வு என்ன?



ஜூன் 1 முதல் ‘கிராமங்களின் வேலைநிறுத்தம்’ என்ற போராட்டத்தை 130-க்கும் மேற்பட்ட விவசாயிகள் சங்கங்கள் கூட்டாக நடத்திவருகின்றன. காய்கறிகளையும் தானியங்களையும் பாலையும் தேசிய நெடுஞ் சாலைகளில் கொட்டி, விவசாயிகள் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்துவருகின்றனர். இறுதி நாளான ஜூன் 10 அன்று ‘பாரத் பந்த்’ நடத்தவும் அழைப்புவிடுத்துள்ளனர். எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரைத்தபடி, வேளாண் விளைபொருட்களுக்கான கொள்முதல் விலையை அதிகப்படுத்த வேண்டும், பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும், விவசாயிகளின் கடன்களை ரத்துசெய்ய வேண்டும் என்பவை முக்கியமான கோரிக்கைகள்.

விவசாயிகளின் கோரிக்கைகளில் எதுவுமே புதியவை அல்ல. பலமுறை வலியுறுத்தியும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்துவதாலும் அரைகுறையாகச் சில முயற்சிகளை எடுப்பதாலும் விவசாயிகள் அணிதிரண்டு இந்த வேலைநிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர். இதற்கு முன்பு தமிழ்நாடு, பஞ்சாப், ஹரியாணா, மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம் ஆகியவற்றில் விவசாயிகள் பலமான கிளர்ச்சிகளை நடத்தினர். மகாராஷ்டிரத்தில் விவசாயிகள் 200 கிலோ மீட்டர் தூரம் ஊர்வலமாகச் சென்று தலைநகர் மும்பையில் முதல்வர் பட்னவீஸைச் சந்தித்துத் தங்களுடைய கோரிக்கை மனுக்களை அளித்தனர். விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குவோம் என்று வாக்குறுதி தந்த பாஜக கூட்டணி, அதில் ஒரு பங்கு வருமானத்தைக்கூடச் சரியாகத் தர நடவடிக்கை எடுக்கவில்லை.

காய்கறிகள் நீங்கலாக ஏனைய வேளாண் விளைபொருட்களின் விலை 2018-ம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 0.55% மட்டுமே உயர்ந்தது. 2014 முதல் 2016 வரையில் முதல் நான்கு மாதங்களில் இதற்கு முன்னர் இருந்த விலைவாசி உயர்வுடன் (2%) ஒப்பிட்டால் இது வெறும் கால்வாசிதான். விவசாயிகளால் சாகுபடி செய்யப்பட்ட உணவு தானியங்கள், காய்கறிகள் முழுதாகக் கொள்முதல் செய்யப்படாமல் அல்லது விற்கப்படாமல் விவசாயிகளிடத்திலேயே தேங்கியுள்ளன. இந்த ஆண்டு பருவ மழையும், விளைச்சலும் நன்றாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விளைச்சல் அதிகரித்தால் விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை விலை குறைவாக வைத்துத்தான் வியாபாரிகளுக்கு விற்க முடியும். இது மேலும் வருவாய் இழப்பையே ஏற்படுத்தும்.

கரும்பு சாகுபடியாளர்கள் சர்க்கரை ஆலைகளுக்கு விற்ற கரும்புக்குப் பணம் கிடைக்காமல் கடும் நிதி நெருக்கடியில் ஆழ்ந்துள்ளனர். உணவு பதப்படுத்தல் துறையை வலுப்படுத்து வதில்கூட அரசு மெத்தனமாகவே செயல்படுகிறது. இத்துறையில் 100% அந்நிய முதலீட்டுக்குக் கதவைத் திறந்துவிட்டும் வளர்ச்சி ஏற்படவில்லை. வேலைநிறுத்தம் நடந்தால், அதை நடத்துகிறவர்களைக் குறை சொல்வது எளிது. ஒவ்வொரு பிரச்சினையையும் உரியவர்களிடம் ஆலோசனை கலந்து உடனுக்குடன் பொதுக் கொள்கை மூலம் தீர்வு காண்பதே அரசுக்கு நல்லது.

- M. சத்யராஜ்

# மறுவாழ்வுக்காக போராடும் மாற்றுத்திறனாளி

சினிமா "லைட்மேன்" வேலை செய்யும் தொழிலாளி போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் பரபரப்பு மனு ஒன்றை கொடுத்தார். இயக்குனர் மணிரத்னத்தின் மீது குற்றம் சாட்டி அவர் பேட்டி கொடுத்தார்.

சென்னை விருகம்பாக்கத்தைச் சேர்ந்த மணிமாறன் (வயது 45), இரண்டு கால்களும் செயல் இழந்த நிலையில் மணிமாறன் சக்கர நாற்காலியில் தனது மனைவி சங்கீதாவுடன் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு வந்து மனு ஒன்றை கொடுத்தார்.

பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

நான் சினிமா "லைட்மேன்" தொழில் செய்து வந்தேன். லைட்மேன் சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் நான் இயக்குனர் மணிரத்னத்தின் படக்குழுவில் பணியாற்றி வந்தேன். இயக்குனர் மணிரத்னம் தயாரித்து வெளியிட்ட, அபிஷேக்பச்சன் நடித்த 'குரு' படத்தின் படபிடிப்பு, சென்னை பெரம்பூரில் நடந்தபோது, நானும் அதில் கலந்துகொண்டேன்.




அப்போது திடீரென்று என்னை விஷக்காய்ச்சல் தாக்கியது. நான் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு சேர்க்கப் பட்டேன். ரூ.2 லட்சம் செலவாகும் என்று கூறினார்கள். ஏழை தொழிலாளியான என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. இயக்குனர் மணிரத்னத்தின் வீட்டிற்கு சென்று அவரிடம் பண உதவி கேட்க முயற்சித்தேன், முடியவில்லை. உதவி கேட்டு அவருக்கு தபால் எழுதினேன். அவரிடமிருந்து எந்த உதவியும் கிடைக்கவில்லை.



சினிமா லைட்மேன் சங்கத்தின் மூலம் எனக்கு ரூ.2 லட்சம் நிதி வழங்க கோர்ட்டு உத்தரவிட்டது. அந்த பணத்தை தருவதற்கு என்னிடம் ரூ.20 ஆயிரம் கேட்டார்கள். நான் வட்டிக்கு வாங்கி அந்த பணத்தை கொடுத்தேன். அதன் பிறகு ரூ.1 லட்சம் தான் கொடுத்தார்கள் இன்னும் ரூ.1 லட்சம் தரவேண்டியுள்ளது. முறையாக சிகிச்சை பெற எண்ணிடம் பணம் இல்லாததால் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு எனது 2 கால்களும் செயல் இழந்து விட்டன.

இப்போது எனது மனைவி வீட்டு வேலை செய்து குடும்பத்தை காப்பாற்றுகிறாள். இயக்குனர் மணிரத்னம் மனிதாபிமானத்தின் அடிப்படையிலும், அவரிடம் வேலை பார்த்த தொழிலாளி என்பதின் அடிப்படையிலும் எனக்கு ஏதாவது அவர் உதவி செய்ய முன்வரவேண்டும். எனது கோரிக்கையை வலியுறுத்தி நான் எனது குடும்பத்தினரோடு வள்ளுவர் கோட்டம் அருகே போராட்டம் நடத்த போலீஸாரிடம் அனுமதி கேட்டு மனு கொடுத்துள்ளேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

- V.சங்கர்


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Cell : 93821 33334, 044 - 4861 5321



# பாஜகவுக்கே மீண்டும் சாதகம்

*2019 மக்களவைத் தேர்தலில் பாஜகவை எதிர்கொள்ள எதிர்க்கட்சிகள் அணிதிரளும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. ஆனால், பல மாநிலங்களில் கட்சிகளிடையே உள்ள பிளவுகள் இன்னமும் பாஜகவுக்கே சாதகமாக இருக்கின்றன.*

ஆந்திர பிரதேசத்தில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸுக்கு, காங்கிரஸுடனும் தெலுங்கு தேசத்துடனும் விரோதம் நிலவுகிறது. தேர்தல் முடிவுகளுக்குப் பின் பாஜக பக்கம் அக்கட்சி செல்லும் என்கிறார்கள். தெலங்கானா ராஷ்ட்ரிய சமிதிக்கு காங்கிரஸுடன் கடும் விரோதம். தேர்தலுக்குப் பின் காங்கிரஸா, பாஜகவா என்றால் பாஜகவையே அது தேர்ந்தெடுக்கும். ஏனென்றால், மாநிலத்தில் காங்கிரஸை அது எதிர்கொள்கிறது.

ஒடிஷாவில் பிஜு ஜனதா தளம் தலைவரும் முதல் வருமான நவீன் பட்நாயக், எதிர்க்கட்சிகளின் கூட்டங் களுக்கு வருவதில்லை. குமாரசாமியின் பதவி ஏற்பி லும் கலந்துகொள்ளவில்லை. மகாராஷ்டிரத்தில் காங்கிரஸ் மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் நெருங்கிவருகின்றன. இந்த நெருக்கம் சிவசேனை பாஜகவுடன் மீண்டும் சேர வழிவகுக்கும்.

டெல்லியில் மொத்தம் உள்ள ஏழு மக்களவைத் தொகுதிகளிலும் பாஜக வளர்ந்துவருகிறது. ஆம் ஆத்மி, காங்கிரஸுடன் சேர வேண்டும். இரு கட்சிகளும் சேர்ந்தால் பஞ்சாபிலும் பாஜக - அகாலி தளம் கூட்டணியை வீழ்த்த முடியும். ஆனால், சாத்தியங்கள் குறைவு. ஹரியாணாவில் பாஜகவுக்கு எதிராக ஓம் பிரகாஷ் சவுதாலாவின் இந்திய தேசிய லோக் தளம் கட்சியுடன் காங்கிரஸ் கைகோக்க வேண்டியிருக்கும். இது நடக்கவில்லை என்றாலோ, ஆம் ஆத்மி தனித்துப் போட்டியிட்டாலோ அது பாஜகவுக்கே மீண்டும் சாதகமாகும்.

மக்களவைத் தேர்தலுக்கு முன்னர் ஏற்படும் கூட்ட ணிக் கணக்குகள் ஒருபுறம் என்றால், தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணிக் கணக்குகளும் முக்கியம். தமிழ்நாட்டின் அதிமுக போல பிராந்தியக் கட்சிகளில் பல, தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி என்றால், காங்கிரஸைவிட பாஜக பக்கமே செல்லும் என்பதும் கவனிக்க வேண்டிய விஷயம்!

- S.ராம்குமார்



## நீர் எப்படி உருவாகிறது?

'நீர் எங்கு உற்பத்தியாகிறது' என்று கேட்டால் உத்தேசமாக விடை சொல்லி விடலாம். பனி படர்ந்த மலைகளில் இருக்கும் பனிப் பாறைகள் உருகி வற்றாத ஜீவ நதியாக உருவெடுக்கிறது என்று சொல்லாம். நீர் எங்கு உற்பத்தியாகிறது என்பதல்ல இங்கு கேள்வி! நீர் எப்படி உருவாகிறது? இதற்கு அறிவியல் ரீதியாக பதில் வேண்டும். இந்தக் கேள்வியும் எளிதானதுதான். இரண்டு ஹைட்ரஜன் மூலக் கூறுகளும், ஒரு ஆக்ஸிஜன் மூலக்கூறும் இணைந்துநீர் உருவாகிறது. விடை இவ்வளவுதான். விளக்கம்தான் மிகப் பெரியது.

ஆக்ஸிஜனுக்கும், ஹைட்ரஜனுக்கும் இடையே நடைபெறும் வேதி வினையால்தான் நீர் உருவாகிறது. சொல்லப் போனால் வேதி வினையால் ஏற்படும் மாற்றங்கள்தான் உலகின் பெரும்பான்மை இயக்கத்திற்குக் காரணம். ஆனால் இந்த வேதி வினைகள் உடனடியாக நடந்து விடுவதில்லை. ஆக்ஸிஜனும், ஹைட்ரஜனும் சேர்ந்த மறு விநாடியே அது நீராக மாறிவிடும் என்றுதான் பலரும் நினைக்கிறார்கள். வேதிவினைகள் அவ்வளவு விரைவாக நடைபெற்றால் அது உலகத்திற்கு பெரிய ஆபத்தையே விளைவிக்கும்.

இப்படி நினைத்துப் பாருங்கள். இரும்புக் கதவின் மீது தண்ணீரை ஊற்றிய உடனே அந்த இரும்புக் கதவு துருப்பிடித்துவிடும் என்றால் என்ன ஆகும்? மரத்துண்டுகள் மேல் மழைநீர் விழுந்த உடனேயே அம்மரத்தில் பூஞ்சைகள் பூத்துவிடும் என்றால் என்ன ஆகும்? நாம் பார்த்து ரசிக்கிற உலகம், ரசிக்கிற மாதிரி இருக்காது. வேதிவினைகள் விரைவாக நிகழ்ந்துவிடும் என்றால் கண் மூடித் திறப்பதற்குள் உலகத்தின் படைப்புகள் அனைத்தும் அழிந்துவிடும். வானமும், கடலும் வற்றி விடும். உலகின் மேற்பரப்பில் உலோகங்களும் இருக்காது; அலோகங்களும் இருக்காது.

உயிர்ப் பொருள்களை மண் சிதைத்து விடும்; தரையில் படுத்துத் தூங்கி எழுகிற நேரத்துக்குள் மனிதனை உயிரோடு மட்கச் செய்துவிடும். நினைத்துப் பார்க்கவே பயங்கரமாக இருக்கிறது அல்லவா? வேதி வினைகள் விரைவுபடுத்தப்பட்டால் இது மாதிரியான வேண்டாத விளைவுகள் ஏற்பட்டுவிடும். ஆனாலும் வேதி வினைகள் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இரும்பு துரு பிடிக்கிறது. கந்தகமும், ஆக்சிஜனும் சேர்ந்து கந்தக டை ஆக்சைடு உருவாகிறது. ஹைட்ரஜனும் குளோரினும் சேர்ந்து ஹைட்ரோ குளோரிக் அமிலம் உருவாகிறது.

இதுபோன்ற வேதிவினைகள் இயற்கையாக துரிதப்பட்டுவிட்டால் அப்புறம் இயற்கை இயற்கை எய்தி விடும். இந்த வேதிவினைகளை விரைவாக நடக்கவிடாமல் எது தடுக்கிறது? அப்படி தடுக்கும் மந்திர சக்தி எது? அந்த மந்திரசக்தி என்பது வேறொன்றுமில்லை. தனிமங்களின் வினைபடுதிறன். ஒரு தனிமத்தின் மூலக்கூறுகள், அவற்றின் வினைபடுதிறனுக்கு ஏற்ப இன்னொரு தனிமத்துடன் சேர்ந்து சேர்மங்களாக உருவாகின்றன. எந்த ஒரு தனிமத்தின் மூலக்கூறும் புல்லட் ரயில் வேகத்தில் இயங்காது (வேதித் தொழிற்சாலைகளில், செயற்கையாகச் செய்யப்படும் வினைகள் நொடிப் பொழுதில் நிகழ்த்தப்படுகின்றன. அவை விதிவிலக்குகள்!)

அப்படியென்றால், ஹைட்ரஜனும், ஆக்சிஜனும் சேர்ந்து நீர் உருவாவதற்கு எத்தனை நாட்கள் ஆகும்? ஒரு கண்ணாடிக் குடுவையில் ஆக்சிஜனையும், ஹைட்ரஜனையும் சேர்த்து அடைத்து ஆயுட்காலம் முழுவதும் காத்திருந்தால்கூட அந்த கண்ணாடிக் குடுவையில் உள்ள ஆக்சிஜனும் ஹைட்ரஜனும் சேர்ந்து நீராக மாறிவிடாது. அவ்வளவு ஏன்? ஒரு நீர்த்துளி உருவாவதற்கான அறிகுறியாக ஒரு நீர்த்திவலையைக் கூட நீங்கள் பார்க்க முடியாது. நூறாண்டுகள் ஆனாலும் இதுதான் கதி. வினை நடக்குமா நடக்காதா என்று சந்தேகம் கூடத் தோன்றலாம். வினை நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் இரண்டு தனிமங்களும் இணைந்து நீர் உருவாவதற்கு பல ஆயிரம் ஆண்டுகள் ஆகும்.

ஓர் அவசரக் குடுக்கையாக, அந்தக் குடுவையை நீங்கள் 500 டிகிரி செல்சியசுக்கு மேல் சூடுபடுத்தினால் வினை வேகமாக நிகழ்ந்து நீர்த் திவலைகள் உருவாகும். ஆனால் 500 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் குடுவை வெடித்து விடுமே! எனவே இயற்கையை விட்டால் வாய்ப்பே இல்லை. ஏன் நீர் உருவாக இவ்வளவு தாமதமாகிறது? ஒரு சின்ன விளக்கம். நீர் உருவாக வேண்டும் என்றால் ஹைட்ரஜன் மூலக்கூறுகளும், ஆக்சிஜனுன் மூலக்கூறுகளும் பல கோடி முறை மோதிக் கொள்ள வேண்டும். பல கோடி மோதல்களில் ஒரு சில மோதல்கள்தான் நீர் மூலக்கூறை உருவாக்குகின்றன.

இவ்வாறு மூலக்கூறு மோதல் நிகழ வேண்டுமானால், தனிமத்தின் அணு மூலக்கூறுகள் பலமிழந்து, தனிமத்தின் ஈர்ப்பு விசையிலிருந்து வெளியேற வேண்டும். வெப்பம் போன்ற இயற்கை சக்திகளால்தான் ஒரு தனிமத்தின் மூலக்கூறு கட்டமைப்பை உடைக்க முடியும்.

இன்னொரு கண்டிஷனும் உண்டு. இந்த இரண்டு தனிமங்களின் மூலக்கூறுகளும் இணைந்து புதிய நீர் மூலக்கூறு உருவாவதை வேறு எந்த சக்தியாலும் தடுக்க இயலாத சூழல் உருவாக வேண்டும். அப்போதுதான் நீர் உருவாகும். செயற்கையாக வேண்டுமானால் ஆய்வகத்தில் சிறிது நீரை உடனே உருவாக்கிவிடலாம். இயற்கையாக உருவாக இலட்சம் ஆண்டுகள் பிடிக்கும். நமக்கு தண்ணீரைச் சேமிக்கும் பழக்கம் இனியாவது வரவேண்டும்

- நிவேதிதா

# சாகாக் கலை எனப்படும்

**கா**காயகற்பம் என்பது பல்லாயிரம் ஆண்டுக் காலம் உடலினை வாழ வைக்கும் முறையாகும். காயம் என்ற சொல் உடல் என்பதை குறிக்கிறது. அழுகணிச் சித்தர் பாடல் களில் இந்த காயகற்பம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது -
பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

இது ஔவைப் பிராட்டியார் அருளிய கல்பமுறை அடங்கிய செய்யுள். இதனை உலகினர் பின்வருமாறு கருத்துக் கொள்வார்கள்.

தும்பிக்கையையுடைய விநாயகப் பெருமானின் திருப்பாதங்களைத் துதிப்பவர் களுக்கு வாக்கு வன்மையும், மனோபலமும், லட்சுமி கடாட்சமும் உண்டாகும். உடலும் வாடாது. ஆனால் இதன் உட்கருத்து வேறு. இச்செய்யுளானது, இந்த உடம்பை நெடுநாள் வரை நரை, திரை, மூப்பு, பிணி என்னும் துன்பங்கள் அணுகாது, என்றும் இளமையாய் இருக்கும் தன்மையைத் தரும் காய கல்ப மூலிகைகளின் விபரத்தைக் கூறுவதாகும்.

இங்கே பூ என்பது தாமரைப்பூ. மேனி என்பது குப்பைமேனி. தும்பி என்பது தும்பைச்செடி.



கையான் என்பது கையான்தகரை (கரிசலாங் கண்ணி, கரிசாலை). பாதம் என்பது செருப்படை

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் ஐந்து மூலிகைகளும் பஞ்சபூத மூலிகைகளாம். நமது உடலும் பஞ்சபூதங்களினாலே உருவானதுதானே. பஞ்சீகரணம் என்பதை அறிந்து சரிவர இவற்றை உபயோகித்தால் உடலை நீண்ட நாட்களுக்கு நரை, திரை, மூப்பு, பிணி அணுகாது. நீண்ட ஆயுளுடன் இந்த உலகத்தில் வாழலாம். இந்த ஐந்து மூலிகைகளிலுமுள்ள செம்பு, இரும்பு, ஈயம் போன்ற தாதுப்புக்கள் நரம்புத்தளர்ச்சி, எலும்புருக்கி மற்றும் பலகீனம் ஆகியவற்றால் ஏற்படும் ஆயுள் குறைவை நிவர்த்தி செய்யுமாகையால், முன்னோர்கள் காயகல்ப மூலிகைகளைப் பற்றிக் கூறியிருக்கின்றனர்.

நம்மில் சிலர் இந்த மூலிகைகள் பலன் கொடுக்குமா என்று சந்தேகம் கொள்ளலாம். ஆனால் பதினெண் சித்தர்களுள் ஒருவரான தேரையர் இதில் சில மூலிகைகளைப் பற்றி பின்வருமாறு கூறியிருக்கின்றார்.

சீறுகின்ற பாம்போடு சில்விஷங்கள்
சென்னிவலி
ஏறுகபம் மாந்தம் இருக்குமோ - நாறுமலர்க்
கொம்பனைய மாதே குளிர்சீத சன்னிவிடும்
தும்பையிலை யென்றொருக்கால் சொல்
தந்த மூலப்பிணி தீர்ந்திடும் புண் சர்வ விஷம்
உந்து குன்மம்வாதம் உதிர்மூலத் தினவு
சூலம் சுவாசம் தொடர்பீனிசம் கபம்போம்
ஞாலங் கொள் மேனி அதனால்
செருப்படைக்கு வாதம்போம் சேர்வான
மேகம்
இருப்படிக்கொள் பொல்லாஇசிவும்
விருப்படிக்கும்
சூலையொடு வாதகுன்மம் தோற்றா
தொருநாளும்
வேலையொத்த கண்ணாய் விளம்பு





# காயகல்பம்

## வள்ளலார் அருளிய கல்ப மருந்து

காயகல்பம் என்பது நோயற்ற வாழ்வு வாழ சித்தர்கள் நமக்கு அளித்த மருந்துகளாகும். சாதாரணமாக காயகல்பம் தயார் செய்ய மிகுந்த செலவாகும். ஆனால் வள்ளலார் மிகக்குறைந்த செலவில் மனித குலம் வாழ காயகல்பம் அருளியுள்ளார்.

வெள்ளை கரிசலாங்கண்ணி 200 கிராம், தூதுவளை 50 கிராம், முசுமுசுக்கை 50 கிராம், சீரகம் 50 கிராம் ஆகியவற்றை பொடியாக காதி கிராப்டில் வாங்கி (சீரகம் மட்டும் தனியாக வாங்கி பொடித்துக் கொள்ளவும்). இந்த பொடிகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். தினமும் காலையில் பல் துலக்கியவுடன் ஒரு தம்ளர் பாலில் மேற்கண்ட பொடியை ஒரு டேபிள் ஸ்பூன் கலந்து ஐந்து நிமிடங்கள் கொதிக்க வைத்து சர்க்கரை கலந்து லேசான சூட்டில் சிறிது சிறிதாக சுவைத்து சாப்பிட வேண்டும். இந்த மருந்து சர்வரோக நிவாரணியாகும். இதனைத் தொடர்ந்து வருடக் கணக்கில் சாப்பிட்டு வர மனிதவுடலை வாட்டும் அனைத்து நோய்களும் குணமாகும். சர்வ நிச்சயமாக பலன் பெறுவீர்கள்.

இதனைப் படிக்கும் அனைத்து நண்பர்களும் இந்த மருந்தினை அவசியம் சாப்பிட வேண்டும். நோயற்ற வாழ்வு வாழ வேண்டும்.

**தூதுவளை பொடி:** நாட்பட்ட சளி இருமல் இளைப்பு(ஆஸ்துமா) குணமடையும் காது நோய் செவிடு பேரு வயிறு, மந்தம் உடல்வலி முக்குற்றம் (வாதம்,பித்தம்,கபம்), கண் நோய் ஜுரம் நீங்கி உடல் வலிமை பெரும்.

**கரிசலங்கண்ணி:** கரிசாலை எனற பெயர் கொண்ட இது ஒரு தெய்வீக மூலிகை என்று வள்ளல் பெருமான் கூறுகிறார். ஏனெனில் இதை தினந்தோறும்பயன்டுத்துவதால் பித்தம் மற்றும் கபத்தை வெளியேற்றி உடம்பை நீடிக்க செய்யும். உள்ளொளியை பெருக்கும் வல்லமை பெற்றது. தினந்தோறும் பச்சையாகவோ அல்லது பொடியினை சூடான நீரில் கலந்து அருந்துவது நல்ல பலனை தரும். கல்லீரல் நோய் காமாலை தீரும். பல் ஈறு சம்பந்தமான நோய்கள் தீரும் தலை முடி உதிர்வதை தடுக்கும் ரத்த விருத்தி உண்டாகும் இது ஒரு சிறந்த காயகல்ப மருந்து.



**முசுமுசுக்கை:** சளி, இருமல், இறைப்பு, மூச்சு பிடிப்பு போன்ற சுவாச கோளாறுகள் குணமாகும்

**சீரகம்:** உடலுக்கு குளிர்ச்சியும், தேகத்தைப் பளபளப்பாக வைக்கும் ஆற்றலும் சீரகத்திற்கு உண்டு.

**வல்லாரை:** வள்ளலார் கூறிய ஞான மூலிகையில் அடுத்தது வல்லாரை. இதற்கு சரஸ்வதி என்ற பெயரும் உண்டு. இது இரத்தத்தை தூய்மைபடுத்தி அறிவை பெருக்கும் வல்லமை வல்லாரைக்கு உண்டு. இதனை காயவைத்து பொடியாகவோ அல்லது மத்திரையாகவோ செய்து சாப்பிடலாம்.

வள்ளலார் அருளிய ஞான மூலிகைகளுள் தூதுவளைக்கும் ஒரு சிறப்பிடம் உண்டு. சாத்வீக உணவுகளிலேயே மிகவும் நுட்பமான உணவு தூதுவளையாகும். கரிசலாங்கண்ணி, பொற்றலை, கையாந்தகரை, தூதுவளை, வல்லாரை போன்ற ஞான மூலிகைகள் அருட்பெருஞ்ஜோதி வள்ளல் பெருமானால் புசிக்கப் பெற்று, உலகமெல்லாம் அவரால் பரப்பப்பட்டது.

- Dr. K. ராஜமாணிக்கம்

# உண்மையான தொண்டு

## ஒருபக்க சிறுகதை

ஒரு தள்ளுவண்டியில் காய்கறி வியாபாரம் செய்யும் ஒருவரின் வித்தியாசமான சப்தம் என்னைக் கவர்ந்தது. “சார் என்னிடமிருந்து காய்கறிகள் வாங்கினால், சூப்பர் மார்க்கெட்டுகளில் இருந்து காய்கறிகள் வாங்குவதை விட உங்களுக்கு ஐந்து நன்மைகள் அதிகம் அந்த நன்மைகள் என்ன வென்று தெரிய வேண்டுமா”. திரும்பி பார்த்தேன். ஒரு அழுக்கு கைலியும் சட்டைக்கு பதில் தோளில் ஒரு துண்டும் அணிந்த ஒரு இளைஞன். பக்கத்தில் இருந்த செயறில் ஆறேழு வயதில் ஒரு பையன். அவன்தான் கேஷியர் என்று நினைக்கிறேன். நான் வாங்க நினைத்த என்னுடைய லிஸ்ட்டிலுள்ள அனைத்து காய்கறிகளும் இவரிடமும் இருக்கிறது. இன்று இவரிடமிருந்து வாங்கினாலென்ன?. (வீட்டுக்காரிக்கு தெரிய வேண்டாம்).

“அந்த ஐந்து நன்மைகள் என்ன என்று நான் தெரிந்து கொள்ளலாமா”.

கண்டிப்பாக..... சார் என்னிடமிருந்து வாங்கும் காய்கறிகளுக்கு நீங்கள் ஜி எஸ் டி தரவேண்டாம். நூறு ரூபாய்க்கு ஐந்து ரூபாய் லாபம். முதல் நன்மை. சார் நீங்கள் வாங்கும் பொருட்களை கொண்டு போக நான் தரும் கவர் ஃப்ரீ... சூப்பர் மார்க்கெட்டில் இந்த கவருக்கு குறைந்தது ஐந்து ரூபாய் தர வேண்டும். ( நாம் காசு கொடுத்து வாங்கும் கவரில் அவர்களுடைய விளம்பரம்). இது இரண்டாவது நன்மை.

மூன்றாவது நன்மை என்ன என்று அறிய ஆவலுடன் அவரைப் பார்த்தேன். சார் சூப்பர் மார்க்கெட்டில் அவர்கள் கேட்கும் விலையை நீங்கள் கொடுக்க வேண்டும்.



எங்களிடம் நீங்கள் விலை பேசி வாங்கலாம். நூறு ரூபாய் பொருளை 80 ரூபாய்க்கு கேட்டாலும் தருவோம். ஏனென்றால் எங்கள் வயிற்றுப்பிழைப்பு இது. எங்களுக்கு வேறு வருமானம் ஒன்றும் இல்லை. 20 ரூபாய் லாபம் இது மூன்றாவது நன்மை.

சரிதான் என்று தலையாட்டிவிட்டு அவரையே பார்த்தேன். “சார் நான்காவது இந்த காய்கறிகள் பக்கத்து கிராமங்களில் நாங்களே இயற்கையாக பூச்சிக்கொல்லி மருந்துகள் ஒன்றும் தெளிக்காமல் விவசாயம் செய்தது. இந்த காய்கறிகளை சாப்பிடுவதால் உடலுக்கு எந்த தீங்கும் வராது சார்...

அவர் சொல்வது அனைத்தும் சரியாகவே எனக்கு பட்டது. மேலும் சூப்பர் மார்க்கெட்டுகளில் அவர்கள் கேட்கும் விலையை கொடுத்து, விஷம் சேர்த்த காய்கறிகளை கியூவில் நின்று வாங்குவதற்கு தயாராகும் நாம் இதையெல்லாம் சிந்திக்கிறோமா?...

சிந்தனையில் நிற்கும்போதே நான் கொடுத்த லிஸ்டில் உள்ள காய்கறிகளை பேக் செய்து கொடுத்தார். அவர் கேட்ட தொகையை கொடுத்தேன். பிறகு நான் அவரிடம், “எல்லாம் சரி ஐந்தாவது நன்மை என்னவென்று சொல்லவே இல்லையே” என்றேன் ஆவலுடன்.

“இது என்னுடைய மனைவி இவளுக்கு இரண்டு கிட்னியும் செயலிழந்து விட்டது. இவளுடைய மருத்துவத்திற்காக நான் யாரிடமும் கையேந்தியதில்லை. நீங்கள் விலை பேசாமல் கொடுத்த இந்த பணத்தின் ஒரு பகுதி இவளுடைய மருத்துவ செலவிற்கு உபயோகப்படும். இதுவும் நீங்கள் செய்யும் ஒரு சாரிட்டிதான் இதற்குரிய நன்மை இறைவனிடம் இருந்து உங்களுக்கு கிடைக்கும். இதுதான் நான் சொன்ன ஐந்தாவது நன்மை.

புன்னகையோடு அவர் சொல்லி நிறுத்தினாலும் அவருடைய கண்கள் நிறைந்திருந்தது.... நானும் கண்ணீரை மறைக்க முயன்று தோற்றேன். இது போன்ற துக்கங்களும், துயரங்களும் வழியோரங்களில் வியாபாரம் செய்யும் பலருக்கும் இருக்கலாம். நம்மால் இவர்களுக்கெல்லாம் உதவ முடியுமா???.

கோடிக்கணக்கில் மூலதனமுள்ள சூப்பர் மார்க்கெட் முதலாளிகளுக்கும், கார்ப்ரேட்டுகளுக்கும் பாக்கெட் நிறைக்க நாம் கொடுப்பதில் ஒரு பங்கை இதைப்போன்ற வழியோர வியாபாரிகளுக்கும் கொடுத்து உதவுவது அல்லவா உண்மையில் சாரிட்டி (தொண்டு)...

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

Makkal Visaranai Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed , at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. A. Mouriyan,



Free Trial Free Trial Free Trial Free Trial Free Trial Free Trial

Healing Your Life

Hi-Tech CERAGEM




செராஜெம் தென்கொரிய நாட்டின் மிகச்சிறந்த இயற்கை மருத்துவ முறையாகும்.

1998 ஆம் ஆண்டு முதல் சுமார் 70 நாடுகளில் ஊசி, மருந்து, மாத்திரை மற்றும் பக்க விளைவு இல்லாமல் ஆரோக்கியமாக வாழ உதவி செய்து வருகிறது.

செராஜெம் இயற்கையான முறையில் நம் உடலில் ஆணி வேரான முதுகெலும்பில் கீழ்கண்ட செயல்பாட்டின் மூலம் மறுவாழ்வு அளிக்கிறது.

செராஜெம் பற்றிய கூடுதல் விவரங்களை எங்களின் மையத்திற்கு வந்து குணமடைந்தவர்கள் விவரங்களையும் ஒப்பு வாக்குமூலங்களையும் நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம். இது ஒரு ISO 9001-2000 தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்

**இதன் செயல்பாடுகள்**

- இரத்த ஓட்டத்தை சீராக்குதல்
- இரத்தத்தை சுத்திகரித்தல்
- இரத்த உற்பத்தியை அதிகரித்தல்
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துதல்
- மன அழுத்தத்தை போக்குதல்
- முதுகெலும்பை வரிசைப்படுத்துதல்

மனிதன் உடலில் நோய் வரக் காரணங்கள்...

1. முதுகு தண்டு வடத்தில் ஏற்படும் அழுத்தம் மாற்றம்
2. இரத்தம் அசுத்தமாக இருப்பது, உடலில் கழிவுகள் தேங்குவது
3. இரத்தம் சரியில்லாமல் இருப்பது.
4. உடல் உஷ்ணம் சீராக இல்லாதது
5. சக்தி ஓட்டம் இல்லாதது.

இந்த காரணங்களை சரி செய்யும் விதமாகவே செராஜெம் தெர்மல் அக்குபிரஷர் மசாஜரை, பல வருட ஆராய்ச்சிக்குப் பின்பு சூரிய ஒளியிலிருந்து வெளிப்படும் Far Infrared Rays-ஐ உள்ளடக்கிய Jade கற்களைக் கொண்டு தயாரித்துள்ளனர்.

இந்த மசாஜரில் Massage, Acupressure, Moxibushion, Chiopractic, Thermal Energy என 5 விதமான மாற்று முறை மருத்துவங்களும் உள்ளடங்கியுள்ளன.

இதில் தினமும் 40 நிமிடம் Therophy எடுப்பதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி உடலில் உண்டாகி, நோய்களைக் கட்டுப்படுத்தவும், நோய்கள் வராமல் தடுக்கவும் முடிகிறது.

உலகத்தில் முதன் முறையாக செராஜெம் இலவசமாக பெருமை வாய்ந்த தெரபியை உலக மக்களுக்கு இலவசமாக அனுபவித்து பார்த்து முடிவு எடுக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது.

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.00 மணிமுதல் மாலை 6.20 மணிவரை
சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 1.20 மணிவரை

MMK பில்டிங், நெ.3, ஆலப்பாக்கம் மெயின் ரோடு, (தேவி அகாடமி பள்ளி எதிரில்) வளசரவாக்கம், சென்னை - 600 087.

Ph : 044 - 4854 3558, Cell : 91766 75494

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

# apple Printers

ஆப்பிள் பிரின்டர்ஸ்












- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements and anything




No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com
**Cell : 93821 33334, 044 - 4861 5321**